வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 10.08.2022 புதன்கிழமை | இதழ் : 246 | பக்கங்கள் : 16




# அம்பாந்தோட்டை நோக்கி விரைகிறது சீனக் கப்பல்!

## பாகிஸ்தானின் போர் கப்பலும் வருகிறது கடும் நெருக்கடிக்குள் சிக்கும் இலங்கை



புதுடில்லி, ஓக. 10
சீனாவின் யுவான் வாங்- 5 கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தை நோக்கி விரைந்து செல்கிறது என்று சர்வதேச - இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதேசமயம், சீனாவில் தயாரிக்கப்பட்ட பாகிஸ்தானுக்கு சொந்தமான போர் கப்பல் நாளை மறுதினம் கொழும்பை

15

# பிசுபிசுத்துப் போனது நேற்றைய போராட்டம்

- களத்திலிருந்து வெளியேறினர் போராளிகள்
- பெருமளவில் பொது மக்கள் பங்கேற்கவில்லை



கொழும்பு, ஓகஸ்ட் 09
அரசாங்கத்துக்கு எதிராக பெரும் எடுப்பிலான போராட்டங்கள் இடம் பெறும் என்று அரசியல் கட்சிகள், தொழில்சங்கங்கள் அறிவித்திருந்தன. ஆனால், நேற்றைய தினம் குறைந்தளவிலானோரின் பங்கேற்புடனேயே போராட்டங்கள் நடைபெற்றன.

15

## ஓக. 09 வெளியேறினர் 'அறகலய'காரர்கள்!

கொழும்பு, ஓக. 09
அரசாங்கத்துக்கு எதிராக ஏப்ரல் 9ஆம் திகதி காலி முகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து காலிமுகத்திடலில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடி போராட்டத்தில் ஈடுபட்

15

# 75 வீதம் உயர்கிறது மின்சார கட்டணம்!

## இன்று முதல் நடைமுறையாகிறது

கொழும்பு, ஓக. 10
இன்று புதன்கிழமை முதல் மின்சார கட்டணத்தை 75 வீதத்தால் அதிகரிப்பதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

புதிய மின்கட்டண உயர்வின்படி, முதல் 30 அலகுகளுக்கு 264 வீதமும், 31 -60 வரையான அலகுகளுக்கு 211 வீதமும் 61 - 90 வரையான

15

# சிறுவர் உரிமைகள் மீறலில் இராணுவம் ஈடுபடுகின்றது!

## பாராளுமன்றில் சிறீதரன் எம். பி.

கொழும்பு, ஓக. 10
கிளிநொச்சி, முல்லைத்தீவில் இராணுவத்தின் ஆளுகைக்குள் முன்பள்ளிகள் இயங்குவது சிறுவர் உரிமைகள் மீறலாகும் என்று பாராளுமன்றில் சி. சிறீதரன் எம்.பி தெரிவித்தார். அத்துடன், முன்பள்ளிகளுக்கு சூட்டப்பட்ட தமிழ், கலாசாரம் மற்றும் பண்பாட்டுடன் தொடர்புடைய பெயர்கள் நீக்கப்பட்டு, இராணுவத்துடன்

15

# பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ரூ. 1000 சம்பளம் வழங்க வேண்டும்!

## மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஓக. 10
பெருந்தோட்டங்களில் தொழில்புரியும் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாயை சம்பளமாக வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன், ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்குவதற்கு எதிராக முதலாளிமார் சம்மேளனம் தாக்

15

# எரிபொருள் நிலைய உரிமையாளரின் இரண்டு வீடுகளுக்கு தீ வைத்தது குழு!

## காரைநகரில் நேற்றிரவு பதற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 10
காரைநகர் கிழக்கு பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரின் வீடுகள் இரண்டு கும்பல் ஒன்றால் நேற்றிரவு தீக்கிரையாக்கப்பட்டன என்று அறிய வந்தது.

காரைநகர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அண்மை நாட்களாக குழு ஒன்று குழப்பத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்

15

# யாழில் 6 பேருக்கு கோவிட் தொற்று!

யாழ்ப்பாணம், ஓக. 10
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 6 பேர் கொரோனா தொற்றுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று அதன் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

இவர்கள்

15

# எத்தகைய சவால்கள் ஏற்பட்டாலும் வடக்கில் கல்விக்கு முக்கியத்துவம்

## கல்வி அமைச்சர் புகழாரம்



கொழும்பு, ஓக. 10
எத்தகைய சவால்கள் தோற்றம் பெற்றாலும் வடக்கு மாகாணத்தில் கல்விக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றமை மகிழ்வுக்குரியது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அத்துடன், 2021 ஆம் ஆண்டுக்கான உயர்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

அது ஒரு நாடு.

அந்த நாட்டில் ஆட்சி செய்பவர் ஐந்து வருடங்கள்தான் ஆட்சி செய்யமுடியும். அதன்பின்னர் அவர் காட்டுக்கு அனுப்படுவார். அங்குள்ள மிருகங்களுக்கு அவர் இரையாகவும் நேரிடலாம்.

அதனால் யாரும் அங்கு ஐந்து வருடங்கள் ஆட்சி செய்யமாட்டார்கள். ஒரு வருடம், அல்லது இரண்டு வருடங்களில் காட்டுக்குப் போகப்போகின்றோமே என்ற கவலையிலேயே அவர்கள் விரைவாக இறந்துவிடுவார்கள்.

ஒருவர் மட்டும் சந்தோஷமாக ஐந்து வருடங்கள் ஆட்சி செய்தார். ஐந்து வருடம் முடிந்த பின்னர் அவர் காட்டுக்கு போகவேண்டும். எல்லோரும் ராஜாவை வழியனுப்ப வந்திருந்தார்கள்.

அப்போ அந்த ராஜா, எந்தவித கவலையும் இல்லாமல் மிக்க கம்பீரமாக காணப்பட்டார். எல்லோருக்கும் ஆச்சரியம்.

போகும் வழியில் ஒருவர் ராஜாவை பார்த்து கேட்டார்,

"நீங்கள் மட்டும் எப்படி சந்தோஷமாக இருக்கிறீங்கள்" என்று.

அதற்கு ராஜா சொன்னார்,

"நான் ஆட்சி செய்த முதல் வருடத்தில் என் படையை அனுப்பி அந்தக் காட்டில் இருந்த கொடிய மிருகங்களை எல்லாம் கொன்றுவிட்டேன்.

இரண்டாவது வருடம் அந்த காட்டில் ஓர் அரண்மனை கட்டிவிட்டேன். இப்போது அங்கு ஒரு சாம்ராச்சியத்தையே உருவாக்கிட்டேன். இப்போ நான்தான் அங்கே ராஜா" என்று.

கிளிநொச்சியில் திடீரென்று நடக்கும் சில சம்பவங்களை பார்த்த நண்பர் ஒருவர் சொன்ன செய்தியை கேட்டபோது இந்தக் கதைதான் ஞாபகத்திற்கு வந்தது.

கிளிநொச்சியில் இதுகாலவரை தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு தலைவர் மாத்திரமே கோலோச்சி வருகின்றார். இவர் யார் என்பதை எழுதித் தெரியவேண்டியதில்லை.

பாராளுமன்ற தேர்தலில் கிளிநொச்சி, யாழ்ப்பாண நிர்வாக மாவட்டங்கள் ஒரு தேர்தல் மாவட்டமாக இருக்கும். இங்குள்ள ஏழு இடங்களுக்கு பத்து வேட்பாளர்கள் நிறுத்தப்படுவார்கள். அந்த பத்துப் பேரில் ஒருவர் மட்டுமே கிளிநொச்சியிலிருந்து களமிறக்கப்படுவார். மற்றைய ஒன்பது வேட்பாளர்களும் யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து களமிறங்குவார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள சுமார் மூன்று இலட்சம் வாக்காளர்கள் மத்தியில் ஆதரவைப்பெற ஒன்பது பேர் போட்டியிட கிளிநொச்சியிலிருந்து போட்டியிடும் ஒரேயொரு வேட்பாளர், அங்குள்ள சுமார் ஒரு இலட்சம் வாக்காளர்கள் மத்தியில் ஆதரவைப் பெற்று மாவட்டத்தில் முதலாமாளாக வந்துவிடுவார்.

இதைத்தான் கடந்த மூன்று தேர்தல்களிலும் நாம் கண்டோம். அதனால்தான் சுமந்திரனும் கடந்த தேர்தலில் கிளிநொச்சியில் சிறிதரனுடன் இணைந்து தேர்தல் பிரசாரம் செய்ய முயன்றார். ஆனாலும் சுமந்திரன் நினைத்தது போல கிளிநொச்சி வாக்குகள் அவருக்கு கிடைக்கவில்லை.

அதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டறிய ஒன்றும் துப்பறியும் நிபுணர்களை அழைக்க வேண்டியதில்லை.

கிளிநொச்சியில் தமிழ்த் தேசிய அரசியலில் அதாவது தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டிருக்கும் அரசியல்வாதிகளில் யாரும் ஒருவர் தன்னை மேவிவிடக்கூடாது என்பதிலும் சிறிதரன் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்.

அதுபற்றி முன்னரும் ஒருதடவை குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால், திடீரென்று சிறிதரனின் ஆதரவாளர்கள் சிலர் முன்நகர்த்தப்படுவதை காணமுடிகின்றது. அங்குள்ள சில உள்ளூராட்சி தலைவர்கள் பயங்கரவாத தடைப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்படுகின்ற செய்திகள் இப்போது அடிக்கடி வருகின்றன.

அவர்கள் சிறிதரனைவிட முக்கியத்தவம்மிக்கவர்களாகக் காட்டப்படுகின்றனர். இதுவெல்லாம் ஏன் திடீரென்று நடக்கின்றன என்று கேட்டார் அந்த நண்பர்.

அவர் சொன்ன காரணத்தை இங்கே ஊடகவெளியில் எழுத முடியவில்லை. ஆனால், அவரின் ஊகங்கள் சரியாகவும் இருக்கலாம் என்பதால் உங்கள் ஊகங்களுக்கு இங்கே இடைவெளி விட்டுவிடுகிறேன். நீங்களே இடைவெளியை நிரப்பிக்கொள்ளுங்கள்.

அந்த புத்திக்கார ராஜாவைப் போல அடுத்த ஐந்து ஆண்டுகளில் காட்டுக்கு செல்லவிருக்கின்றவர்கள் அரண்மனை கட்டத் தொடங்கியிருக்கிறார்களோ?!

- ஊர்க்குருவி.

# பாடசாலை மாணவர்களும் பகுதிநேரம் பணி புரியலாம்

### புதிய சட்டத்தை கொண்டுவருகின்றது அரசு

கொழும்பு, ஒக. 10

பதினாறு வயது முதல் இருபது வயது வரை உள்ள இளைஞர்கள் தனியார் நிறுவனங்களில் பகுதி நேரமாக வேலை செய்யும் வகையில் சட்டங்களில் திருத்தம் செய்ய தொழிற் துறை அமைச்சு தயாராகி வருகிறது.

அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், சிறுவர்கள் வேலை செய்யும் சூழலுக்குப் பழக்கப்படுத்தப்படாததால் தொழிற்துறையில் பல பிரச் னைகள் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த வயதிற்குட்பட்ட இளைஞர்கள் மாதத்துக்கு 20 மணிநேரம் பகுதி நேர வேலைகளைச் செய்யலாம் என்றும் அந்தச் சேவைக் காலத்திற்கு தனியார் நிறுவனங்களும் ஊதியம் செலுத்தவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

புதிய சட்ட திருத்தத்தின் படி, பாடசாலை மாணவர்களும் பணிபுரிய வாய்ப்பு கிடைக்கும் என்றாலும் நிரந்தர வேலை வாய்ப்புகளை வழங்கக்கூடாது என்றும் முறையான பயிற்சி கட்டாயம் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

எவ்வாறாயினும் ஆபத்தான வேலை வாய்ப்புகள் 72 இருப்பதாகவும், அவற்றில் பணிபுரிய அவர்களுக்கு அனுமதி வழங்கப்படாது என்றும் தொழிற்துறை அமைச்சு கூறியுள்ளது.

பகுதி நேர வேலைவாய்ப்பில், ஈ.பி.எவ். மற்றும் ஈ.ரி.எவ் செலுத்தும்போது பிரச்னை ஏற்படுவதால், அதற்கான விதிகளிலும் திருத்தம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சு கூறியுள்ளது. (அ)

## யாழ்ப்பாணம் - கதிர்காமம் விசேட பஸ் சேவை ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஒக. 10

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காம கந்தன் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கை போக்குவரத்து சபை விசேட பேருந்து சேவை இடம்பெறவுள்ளது.

இந்த விசேட பேருந்து சேவை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை இடம்பெறவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். சாலை முகாமையாளர் குணசீலன் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை வரை தினமும் மாலை 5 .15 மணிக்கு யாழ். மத்திய பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து புறப்படும் எனவும் கதிர்காமம் செல்ல விரும்பும் பக்தர்கள் இந்த சேவையைப் பயன்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ - 3)

## கொரோனா தொற்றுக்கு வவுனியாவில் ஒருவர் பலி!

வவுனியா, ஒக. 10

வவுனியாவில் மீண்டும் கோவிட் தொற்று காரணமாக ஒருவர் மரணமடைந்தார் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, செட்டிகுளம், நேரியகுளம் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் மூச்சு திணறல் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட பி. சி. ஆர் பரிசோதனையில் அவருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது. இந்நிலையில் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

மரணமடைந்தவர் செட்டிகுளம், நேரியகுளம் பகுதியைச் சேர்ந்த 66 வயது நபர் என்று சுகாதாரப் பிரிவினர் மேலும் தெரிவித்தனர். (ஐ)

## கொரோனாவுக்கு 6 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக. 10

நாட்டில் கொரோனா தொற்றுக் காரணமாக நேற்று முன்தினம் மட்டும் 6 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

உயிரிழந்தவர்களில் ஐவர் பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். இவர்களில் 3 ஆண்கள் மற்றும் இரு பெண்கள் அடங்குவர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, 30 - 60 வயதுக்கு உட்பட்ட ஆண் ஒருவரும் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக. 10

"இலங்கை நெருக்கடியில் மக்கள் எழுச்சியும் எதிரான ஒடுக்குமுறைகளும்", என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பி. ப. 4 மணியளவில் இல 62, கே. கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் விசேட உரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், பல்கலைக்கழக ஆசிரியர் தொழில்சங்கத்தின் உபதலை வருமான கலாநிதி அகிலன் கதிர்காமர் ஆற்றவுள்ளார்.

தொடர்ந்து சபையோர் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையாடல் இடம் பெறும்.

ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

# எந்தவொரு தரப்புக்கும் அநீதி இழைக்காமல் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் முடிவு!

### நீதி அமைச்சர் விஜேதாஸ தெரிவிப்பு

கொழும்பு,ஒக. 10

"எந்தவொரு தரப்புக்கும் அநீதி இழைக் காத வகையிலேயே தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் கையாளப்படும்." - என்று நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

சர்வக்கட்சி அரசுக்காக ஜனாதிபதியிடம் நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன, அதில் பிர தானமான ஒன்று தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் அறிவித்திருந்தார்.

இது தொடர்பில் நீதி அமைச்சரிடம் வினவிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

"போரால் பகைமை ஏற்பட்டிருந்தது. அந்த பகைமையை கருணை மூலம் வெல்லவே நடவடிக்கை எடுக்கப்பட்டது. தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப் பதற்கான நடவடிக்கை நல்லாட்சியின்போது மேற் கொள்ளப்பட்டது. சாட்சியங்கள் இன்றி நீண்ட கால மாக தடுத்து வைக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டனர். சிலருக்கு பிணை வழங்கப்பட்டது.

விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு, வழக்கு விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டன. சிலருக்கு எதிராக பாரிய குற்றச்சாட்டுகள் உள்ளன. அவர்கள் தொடர்பிலும் தீர்மானம் எடுக்கப்படும். எந்தவொரு தரப்புக்கும் அநீதி இழைக்காத வகையில் நடவடிக்கை முன்னெடுக்கப்படும். " - எனவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu
10.08.2022 புதன்கிழமை
பிலவ வருடம், ஆடி 25

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இந்தியாவின் தலையீடு?

சோவியத் யூனியனின் உடைவை தொடர்ந்து உலக வரலாறு முடிந்துவிட்டதாக, அமெரிக்க அரசியல் விஞ்ஞானியான, பிரான்சிஸ் புக்குமாயா பிரகடனம் செய்தார். 'உலக வரலாற்றின் முடிவும் கடைசி மனிதனும்' என்னும், அவரின் நூல், 1992இல் வெளியானது. இரண்டாம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து, உலக அரசியல் இரண்டு நாடுகளுக்கிடையிலான முரண்பாட்டால் புரிந்துகொள்ளப்பட்டது. அரசியலில் இதனையே, இரு துருவ ஒழுங்கு என்பர். ஒருபுறம் சோவியத் யூனியனும் மறுபுறம் ஐக்கிய அமெரிக்காவும் உலகத்தை கட்டுப்படுத்தும் போட்டியில் மோதிக் கொண்டன.

இந்த நிலையில்தான், 1991 (1990-1991) களின் இறுதியில், சோவியத் யூனியன் பல துண்டுகளாக உடைவுற்றது. இதனைத் தொடர்ந்து, அமெரிக்க - சோவியத் பனிப்போர் முடிவுற்றது. அதாவது, பனிப்போரில் அமெரிக்கா வெற்றி பெற்றது. இதனைத் தொடர்ந்து, முழு உலகும் அமெரிக்க மேலாதிக்கத்தின் கீழ் வந்தது. 90களுக்கு பின்னரான உலக ஒழுங்கு என்பதே - அமெரிக்காவால் தீர்மானிக்கப்படும் உலக ஒழுங்காகவே இருந்தது. இதனை அடிப்படையாகக் கொண்டுதான், புக்குயாமாவும் தனது வாதத்தை முன்வைத்திருந்தார். அதாவது, இனி உலகத்தை தாராளவாத அரசியலே ஆளும் என்பதே அவரின் வாதமாகும்.

உண்மையிலேயே வரலாறு முடிந்துதான் விட்டதா? கடந்த சில ஆண்டுகளாக இடம்பெற்றுவரும் அரசியல் விவாதங்கள் மீளவும் வரலாற்றின் புதிய ஆரம்பம் தொடர்பானதாக இருக்கின்றது. முன்னர் சோவியத் யூனியன் இருந்த இடத்தில், இப்போது சீனா இருக்கின்றது. 2049இல், சீனா, உலக ஒழுங்கைத் தீர்மானிக்கும் ஒரு சக்தியாக எழுச்சியடைந்துவிடும் என்றவாறான விவாதங்கள் மேற்குலகை ஆக்கிரமித்திருக்கின்றன. மனித குலம் இருக்கும் வரையில், அதிகார மோதல்களும் இருக்கும், அதிகார மோதல்கள் இருக்கும் வரையில் வரலாறு ஒருபோதுமே முடிந்துவிடப் போவதில்லை.

இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்னும் அடிப்படையில்தான், இந்தியாவின் அன்றைய தலையீடு நிகழ்ந்தது. ஒரு பிராந்திய சக்தி என்னும் நிலையில் இந்தியாவின் - தலையிடும் வரலாறும் முடிந்துவிடப் போவதில்லை - என்பதையே அண்மைக்கால விடயங்கள் தெளிவுபடுத்துகின்றன.

அன்றைய இந்தியாவிடம், அமெரிக்காவின் விரிவாக்கம் தொடர்பான அச்சங்கள் மேலோங்கியிருந்தன. இன்றைய இந்தியாவிடம், சீனாவின் எழுச்சி தொடர்பான அச்சங்கள் மேலோங்கியிருக்கின்றன. இதிலிருந்து இந்தியாவால் ஒருபோதும் விலகியிருக்க முடியாது. இந்தியா விலகினால், அதன் பின்னர், இந்தப் பிராந்தியத்தில், இந்தியா ஒரு சக்தியாக இருக்கவே முடியாது. ஒரு பிரதான சக்தியாக இருக்க வேண்டுமென்றால், இந்தியா தலையிட்டுத்தான் ஆக வேண்டும். வேறு எந்தவொரு தெரிவும் இந்தியாவிடம் இல்லை.

சீனாவின் யுவான் வாங்-5 கப்பல் விவகாரத்தில், இலங்கையின் இறைமை மதிக்கப்பட வேண்டுமென்று சீனா தெரிவித்திருக்கின்றது. ஓர் இறைமையுள்ள நாட்டின் விடயங்களில் இந்தியா தலையீடு செய்யக்கூடாதென்பதே சீனாவின் வாதமாக இருக்கின்றது. ஆனால், பலம்பொருந்திய நாடுகளின் தலையீடுகளுக்கு இறைமை எப்போதுமே ஒரு தடையாக இருப்பதில்லை. ஏனெனில், ஒரு பெரிய நாட்டுக்கு அருகிலிருக்கும் சிறிய நாடு, அதன் விருப்பப்படி நடக்க முடியாது. அவ்வாறு நடந்தால், குறித்த பெரிய நாட்டின் கோபத்துக்கு ஆளாக நேரிடும்.

1984இல், அப்போதைய இந்திராகாந்தி தலைமையிலான இந்தியா, தேசிய பாதுகாப்பு என்னும் அடிப்படையில்தான், இலங்கையின் உள்விவகாரங்களில் நேரடியாக தலையீடு செய்தது. பாரிய நெருக்கடி ஏற்பட்டால், அவ்வாறானதொரு தலையீடு மீண்டும் நிகழாது என்றில்லை. ஏனெனில், ஒரு பலம்பொருந்திய நாட்டின் பொறுமைக்கு எல்லையுண்டு. அந்த எல்லைக் கோட்டை தாண்டினால், அதன் பின்னர் நாடுகளின் இறைமை என்பது ஒரு பொருட்டல்ல. தற்போது இடம்பெற்றுவரும், ரஷ்ய- உக்ரைன் யுத்தம் இந்த அடிப்படையில்தான் நிகழ்கின்றது. உக்ரைன் ஓர் இறைமையுள்ள நாடு ஆனாலும் அதன் சொந்த முடிவுகள் ரஷ்யாவின் தேசிய பாதுகாப்பை கேள்விக்கு உள்ளாக்குவதாக ரஷ்யா கருதுகின்றது. இதன் காரணமாகவே, ரஷ்யா யுத்தத்தைத் தெரிவு செய்தது.

எனவே, இலங்கை விடயத்தில் இந்தியாவின் தலையீடுகள் எக்காலத்திலும் தவிர்க்கவே முடியாதது. இதனைத் தவிர்க்க முடியுமென்று எண்ணுகின்ற போதெல்லாம், இலங்கைத் தீவு பாரதூரமான நெருக்கடிக்குள் வீழ்வதும் தவிர்க்கவே முடியாதது. தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வு விடயத்திலும் இதுதான் யதார்த்தம். இது எவருடைய விருப்பமும் அல்ல மாறாக, பிராந்திய நிர்ப்பந்தம்.

# கடலாதிக்கத்தை நிலை நிறுத்திய இந்தியா!

அலசுவது இராஜதந்திரி

இமயம் முதல் குமரிமுனை வரை பல்வேறு இராச்சியங்களை கொண்ட தேசமாக இந்தியா விளங்கியிருந்தது. இந்த இராச்சியங்களிலே குறிப்பிடத்தக்கதாகவும் பலம்மிக்க கடலாதிக்கத்தை கொண்டதாகவும் விளங்கியதே தென்னிந்தியாவில் நிலை பெற்றிருந்த சோழ சாம்ராச்சியமாகும்.

சோழர்களின் ஆட்சியிலே இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன் ஆகியோரின் ஆட்சி பராக்கிரமமானதாகவும் தமிழையும் அதனோடிணைந்த மகத்துவங்களை உலகறிய வைப்பதாகவும் அமைந்திருந்தது.

தஞ்சாவூரை தலைநகராகக் கொண்டிருந்த சோழப்பேரரசு, அதன் வல்லாதிக்கத்தை தெற்கே இலங்கை முதல் கிழக்கே இந்தோனேஷியா வரை விஸ்தரித்திருந்தது.

இன்றுங்கூட சோழப் பேரரசின் ஆளுமையை இலங்கையின் கிழக்கே அமைந்துள்ள பொலநறுவையில் காணப்படுகின்ற - காலச் சக்கரத்தினால் சிதைவுற்ற புராதன சிவாலயங்கள், மற்றும் திராவிட கட்டட கலையம்சங்கள் என்பவை சுட்டிக்காட்டுகின்றன.

சோழ மன்னர்களிலே இராஜேந்திர சோழனின் காலம் சோழர்களின் கடலாதிக்கத் தைப் பெரிதும் பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது.

கங்கை கொண்ட சோழன் என்று இராஜேந்திர சோழன் போற்றப்பட்டிருந்தார். தமிழ்நாட்டின் நாகபட்டினத்தில் இராஜேந்திர சோழனின் கடற்படைத்தளம் அமைக்கப்பட்டிருந்தது. இத்தளத்திலிருந்தே சீனாவையும் தாண்டி தனது கடலாதிக்கத்தை இராஜேந்திர சோழன் கொண்டிருந்தார்.

2014ஆம் ஆண்டு இந்திய கடற்படை இராஜேந்திர சோழனின் ஆயிரமாவது பிறந்த தினத்தை வெகு விமரிசையாக கொண்டாடியிருந்தது. இதை முன்னிட்டு ஒரு பாய் மரக் கப்பலையும் இந்திய கடற்படை இராஜேந்திர சோழர் வியாபித்திருந்த கடலாதிக்க வலயங்களில் வலம்வர வைத்திருந்தது.

வெறுமனே கடல் வாணிபம் , கடற்படை, என்பவற்றோடு மட்டுமல்லாது. கப்பல் கட்டுவதிலும் சோழர்கள் பிரபலம் பெற்றிருந்தனர். கீர்த்திமிக்க கப்பலோட்டிய தமிழர்களாக விளங்கிய சோழர்களின் காலத்தில் விளங்கியிருந்த கடலாதிக்கத்தை இன்று வரை இந்தியா தனது கடற்படை பலத்தை அதிகரித்துப் பேணி வருகின்றது.

இந்தியா நீர்மூழ்கிக் கப்பல்களையும் விமானம் தாங்கி கப்பல்களையும் அண்மைக்காலங்களில் நிர்மாணித்து வருகின்றது. தென்னாசியாவிலும், ஆசியப் பிராந்தியத்திலும் சீனாவின் வல்லாதிக்க விஸ்தரிப்பு விரிவடைந்து பிராந்திய ரீதியான அதன் அச்சுறுத்தல்கள் தலையெடுக்கக்கூடாது என்பதில் அமெரிக்காவும், இந்தியாவும் விழிப்பாக இருக்கின்றன. அண்மையில் சீனாவுக்கு அருகே அமைந்துள்ள தாய்வானுக்கு அருகில் சீனா இராணுவ ஒத்திகையை நடத்தியிருந்தது. அதேவேளை இந்தியாவும் அமெரிக்காவும் கூட்டுக்கடற்படை பயிற்சிகளையும் இந்து சமுத்திர பிராந்தியத்தில் அடிக்கடி நடத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளன.

இத்தகைய பின்னணியிலேயே சீனாவின் உளவுக்கப்பலான யுவான் வாங்-5 கப்பல் இலங்கைக்கு நாளையதினம் அம்பாந் தோட்டை துறைமுகம் நோக்கி வருவது குறித்து இந்தியா தனது கடும் ஆட் சேபனையை வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் ஆட்சேபனையைத் தொடர்ந்து சீனக்கப்பல் யுவான் வாங்-5 இலங்கை வருவதை இலங்கை அரசு தடுத்துள்ளது.

இலங்கை ஒரு கேந்திர முக்கியத்துவம் மிக்க தீவக தேசமாக இருக்கின்ற காரணத்தால், நீண்ட நெடுங்காலமாகவே இலங்கையை சூழவரவுள்ள துறைமுகங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கவையாக இருக்கின்றன. வடக்கே காங்கேசன்துறை துறைமுகம் மன்னாரில் தலைமன்னார் துறைமுகம், பருத்தித்துறை துறைமுகம், மற்றும் கிழக்கே திருகோணமலை துறைமுகம் என்பவை கடல் பாதுகாப்பு, கடல் வாணிபம் என்பவற்றை பொறுத்தவரை மிகப்பிரபலமானவை.


இருந்தபோதிலும் இலங்கையில் சீனாவின் செல்வாக்கு அண்மைக்காலங்களில் விரிவடைய ஆரம்பித்துள்ளதை பிரதிபலிப்பதாகவே சீனாவால் தென்னிலங்கையில் அமைக்கப்பட்டுள்ள அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் ஆகியவை விளங்குகின்றன. இதுதவிர, தலைநகர் கொழும்பில் கடலுக்குள்ளேயே ஒரு பெரும் நிலப்பரப்பை துறைமுக நகர அபிவிருத்தி என்ற வகையில் சீனா நிர்மாணித்துள்ளது.

எனவே, சீனக் கப்பலான யுவான் வாங்-5 செய்மதி மற்றும் வான்வெளி ஆய்வுக் கப்பலென விபரிக்கப்பட்டுள்ளபோதிலும் அந்தக் கப்பல் அம்பாந்தோட்டையில் நங்கூரமிடுவதன் மூலம் இந்தியாவின் கடல் மற்றும் வான்வெளி நடவடிக்கைகளை நோட்டமிட முடியும் என இந்தியா கருதுகின்றது. இதன் காரணமாகவே தற்போது இந்தியாவின் ஆட்சேபனை வலுவடைந்ததையடுத்து சீன ஆய்வுக் கப்பலின் இலங்கை வருகை நிறுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம், இந்தியா தென்னாசியப் பிராந்தியத்தில் தன்னை மீறும் வகையில் விஸ்தரிக்கப்படக்கூடிய கடல், ஆகாய அத்துமீறல்களை அனுமதிக்க முடியாது என்ற செய்தியை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

சீனாவின் யுவான் வாங்-5 ஆய்வுக்கப்பல் 2007ஆம்ஆண்டு கட்டப்பட்டது. 25,000 தொன் எடை கொண்டது. இராணுவத்தின் கேந்திர நடவடிக்கைகளை திட்டமிட்டு கையாளுகின்ற பிரிவினரால் இக்கப்பல் மூலம் கடல் மற்றும் வான்வெளி ஆய்வுகளை இராணுவ தேவைகளின் பொருட்டு சீனா கையாளுகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
முயற்சியில் இருந்த தடைகள் விலகும். நினைத்ததை நிறைவேற்றுவீர்கள். பொருளாதார நெருக்கடி விலகும். நீண்ட நாள் முயற்சி ஒன்று நிறைவேறும். உங்களின் செல்வாக்கு உயரும்.

**இடபம்**
முயற்சியில் நீங்கள் எதிர்பார்த்த பலன்களை அடைய முடியாமல் போகும்.திட்டமிட்ட செயலில் பின்னடைவுகள் ஏற்படும். செயலில் கவனம் தேவை. பிறரால் சில சங்கடங்களை சந்திப்பீர்கள்.

**மிதுனம்**
முயற்சிகளில் ஆதாயம் உண்டாகும். நண்பர்களின் உதவி கிடைக்கும்.மற்றவர்களால் முடியாத ஒரு முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். வருவாயில் இருந்த பிரச்னையை சரி செய்வீர்கள்.

**கடகம்**
இழுபறியாக இருந்த ஒரு செயல் இன்று நிறைவேறும். நன்மையான நாள்.உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். மற்றவர்களால் மதிக்கப்படுவீர்கள்.பகைவர்கள் பலமிழந்து போவார்கள்.

**சிம்மம்**
குழந்தைகளுக்காக மற்ற வேலைகளை ஒதுக்கி வைப்பீர்கள். முயற்சி வெற்றியாகும். செல்வாக்கு உயரும். பிறரால் சாதிக்க முடியாத ஒன்றை சாதிப்பீர்கள். புதிய இனங்களில் முதலீடு செய்வீர்கள்.

**கன்னி**
உங்கள் மனம் காட்டும் வழியில் சென்று நினைத்ததை அடைவீர்கள். சொத்துக்கள் வாங்கும் முயற்சி நிறைவேறும். நீண்டநாள் விருப்பம் நிறைவேறும். வரவுகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்**
எதிர்பாலினத்தினர் உதவியுடன் நினைத்ததை அடைந்து மகிழ்வீர்கள். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.எதிர்ப்புகளை சமாளித்து எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

**விருட்சிகம்**
சுபச்செலவு உண்டு. திட்டமிட்டு செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். எதிர்பார்த்த சுபச்செய்தி வரும். குடும்பத்தில் ஒருவருக்கு திருமணப்பேச்சு கூடி வரும்.

**தனுசு**
மனதில் குழப்பம் ஏற்படும். உங்கள் செயல்களில் தடுமாற்றம் உண்டாகும். உங்களது முயற்சியில் எதிர்பார்த்த நன்மையை அடைய முடியாமல் போகும்.நெருக்கடியால் சங்கடப்படுவீர்கள்.

**மகரம்**
அலைச்சல் கூடும். உங்களது செல்வாக்கை வெளிக்காட்டுவதற்காக செலவுகள் செய்வீர்கள். செலவுகள் அதிகரிக்கும் என்றாலும் நீங்கள் விரும்பியதை அடைந்து மகிழ்வீர்கள்.

**கும்பம்**
நிதிநிலை உயரும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். பொன் பொருள் சேர்க்கையால் மகிழ்ச்சி கூடும்.எதிர்பார்த்த வரவு உண்டு. குடும்பத்தில் இருந்த சங்கடங்கள் விலகும்.

**மீனம்**
உங்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.பணியிடத்தில் இருந்த நெருக்கடியை சரி செய்வீர்கள். பிறரால் பாராட்டப்படுவீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். சிலர் வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள்.

# எங்கு வளர்ந்தாலும் பா.ஜ.க. தமிழகத்தில் வளர முடியாது

## வைகோ தெரிவிப்பு

*திருப்பூர், ஓக. 10*

"போராளி என்று சொல்வதில் கிடைக்கும் மகிழ்ச்சி வேறு எதிலும் இல்லை" என்று திருப்பூர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் வைகோ தெரிவித்தார். மேலும், "பா. ஜ. க. எங்கு வளர்ந்தாலும் தமிழகத்தில் அவர்கள் வளர முடியாது என்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும்" என்றார்.

திருப்பூரில் நடைபெற்று வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் 3ஆம் நாள் நிகழ்வு நேற்று நடந்தது. இதில், பங்கேற்ற ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோ பேசுகையில்,

"பொதுவுடமை கொள்கைக்காக தன்னை அர்ப்பணித்துள்ள தலைவர்கள் நிறைந்துள்ள அவை இது. தொடக்க காலத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்தினர் அனுபவித்தது கொஞ்சம் அல்ல. தூக்குமேடைகளையும், எண்ணிடலங்கா சித்ரவதைகளையும் அனுபவித்தவர்கள்.

பல்வேறு போராட்டங்களில் துப்பாக்கி குண்டுகளுக்கும், தூக்கு கயிறுகளுக்கும் அஞ்சாமல் இருந்தவர்கள். "தகைசால் தமிழர்" நல்லகண்ணு வீரம் நிறைந்தவர். எதற்கும் அஞ்சாதவர். அனைவருக்கும் மரியாதை கொடுக்கும் பண்புள்ளவர். உயிர் பலிக்கு அஞ்சாமல் நல்லக்கண்ணு போராடி கட்சியை வளர்த்தார். கோவை, திருப்பூர் என கம்யூனிஸ்ட் இயக்கத்தினரின் உயிர்த் தியாகத்தால் கட்சி மிக வேகமாக வளர்ந்த இடம் இது.

இந்தியாவில் வேறெங்கும் இல்லாத அளவுக்கு கான்பூருக்கு பிறகு, சுகாதாரப் பணியாளர்கள், பஞ்சப்படி போராட்டங்களுக்கு வெற்றி கிட்டிய இடம் திருப்பூர். இந்தியாவில் வேறெங்கும் நிகழவில்லை. நாட்டின் சுதந்திரத்துக்கு பிறகு காங்கிரஸ் ஆட்சிக்கு பிறகு இன்றைக்கு நம்மை ஆண்டுகொண்டிருக்கும் பாஜக இந்துத்துவா கொள்கையை புகுத்துகிறது. ஒரே மொழி, ஒரே நாடு, ஒரே மதம் என்பதை திணிக்கிறது.

ஒரே நாடாக அமைந்தால், சோவியத் யூனியனை போல் பிரிந்து போகும். அனைத்து மொழி, மதத்துக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். மதவெறியோடு, சனாதன வெறியோடு, ஹிந்தியை, சமஸ்கிருதத்தை திணிக்கும் போக்கு நடக்கிறது. ஆயுதப் போராட்டத்தை நாம் கையில் எடுக்க தேவையில்லை. மோடி அரசு அம்பானி, அதானி கூட்டத்துக்காக ஆட்சி நடத்துகின்றனர். மக்களுக்காக ஆட்சி நடத்தவில்லை.

ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, திருப்பூரில் நாம் எடுத்துக்கொள்ளும் உறுதி, பொருத்தமாக இருக்கும். சனாதன சக்திகளை, இந்துத்வா சக்திகளை முறியடிக்க வேண்டிய அவசியம் நமக்கு ஏற்பட்டுள்ளது. பா. ஜ. க. எங்கு வளர்ந்தாலும் தமிழகத்தில் அவர்கள் வளர முடியாது என்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். தோழமைக் கட்சிகள் ஒன்றாக இணைந்து எந்த அடக்குமுறைக்கு அஞ்சாமல் இந்த ஒற்றுமையை பலப்படுத்தினால், தமிழகத்தில் பா. ஜ. க. தலை எடுக்க முடியாது - என்றார்.

# ஆதிச்ச நல்லூரில் தாழியில் தங்க நெற்றிப்பட்டயம் மீட்பு

*தூத்துக்குடி, ஓக. 10*

ஆதிச்சநல்லூரில் அகழாய்வுப் பணி யின் போது தங்க நெற்றிப் பட்டயம் கண்டு பிடிக்கப்பட்டது. வெண்கல, இரும்பு பொருட்களும் கிடைத்துள்ளன.




தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிர பரணி நதிக்கரையில் உள்ள ஆதிச்சநல்லூரில் மத்திய தொல்லியல் துறை சார்பில் அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை, அங்கு 80இற்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் தங்கத்தாலான காதணி கண்டுபிடிக்கப் பட்டது. நேற்றுமுன்தினம் இங்கு கிடைத்த முதுமக்கள் தாழிக்குள் தங்கத்தால் செய்யப்பட்ட 3.5 சென்ரி மீற் றர் நீளம் கொண்ட நெற்றிப்பட்டயம் கண்டு பிடிக்கப்பட்டது.

வெண்கல ஜாடி ஒன்றும் இருந்தது. அந்த ஜாடியைச் சுற்றி 5 இடங்களில் கொக்கு, வாத்து போன்ற பறவைகள் நீர் அருந்துவதுபோல் அலங்காரங்கள் இருந்தன.

அதே முதுமக்கள் தாழியில் வெண்கலத்தாலான 2 வடிகட்டி, 9 அம்புகள், 1 வாள், 1 ஈட்டி, 1 சூலம், தொங்கட் டான் உள்ளிட்ட 20 இரும்பு பொருட்களும் இருந்தன.

1902இல் ஆங்கிலேய அதிகாரியான அலெக் சாண்டர் ரியா இங்கு அகழாய்வு செய்தபோது தங்கத்தால் செய்யப்பட்ட நெற்றிப் பட்டயம் கண்டுபிடிக்கப் பட்டது. 120 ஆண்டுகளுக்கு பிறகு அதுபோல் மீண்டும் தங்க நெற்றிப்பட்டயம் கிடைத்துள்ளது.

இதேபோன்று, சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே கொந்தகை அகழாய்வில் ஒரே முதுமக்கள் தாழியில் 74 சூதுபவளங்கள் (அரிய வகை கல்) கண்டெடுக்கப்பட்டன.

கீழடி அருகே கொந்தகை பகுதி ஈமக்காடு என்பதால், அங்கு தொடர்ந்து முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப் பட்டு வருகின்றன.

கொந்தகையில் முதன் முறையாக ஒரே முது மக்கள் தாழியில் 74 சூதுபவளங்கள், ஒரு செப்புத் துண்டு கிடைத்தது. சூதுபவளம் ஓர் அரிய வகை கல் ஆகும்.

பழங்காலத்தில் இந்தக் கல் மதிப்பு மிக்கதாகக் கருதப்பட்டது. இந்த வகை கற்க ளால் தயாரிக்கப்பட்ட அணிகலன்களை மன்னர்கள், அரசின் முக்கிய பிரமுகர்கள், செல்வந்தர்கள் அணிந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இறந்தவர்களுடன் அணிகலன்களையும் வைத்து புதைக்கும் வழக்கம் பழங்காலத் தமிழர்களிடம் இருந்துள்ளது தெரியவந்துள்ளது.

(ஐ)

# ஒன்லைன் சூதாட்டக்காரர்கள் தி. மு. க. அரசுடன் கைகோப்பு!

## எதிர்க்கட்சி தலைவர் குற்றச்சாட்டு

தி. மு. க. அரசுடன் ஒன்லைன் சூதாட்டம் நடத்துவோர் கைகோத்துள்ளனர். அதனால், சூதாட்டத்துக்கு தடை சட்டம் கொண்டு வராமல், கருத்துக்கேட்டு காலம் கடத்துகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி குற்றம்சாட்டினார்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் அ. தி. மு. க. சார்பில் நடந்த வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற எதிர்க்கட்சித் தலைவரும், அ. தி. மு. க. இடைக்கால பொதுச்செயலாளருமான பழனிசாமி பேசியதாவது:

அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட அவிநாசி-அத்திக்கடவு திட்டம் இதுவரை நிறைவடையவில்லை. இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு இருந்தால், தற்போது பவானிசாகர் உபரிநீர் அனைத்து ஏரிகளுக்கும் நிரப்பப்பட்டு இருக்கும். இந்தத் திட்டம் ஆமை வேகத்தில் நடந்து வருகிறது.

தமிழகத்தில் கஞ்சா, போதைப் பொருட்கள் புழக்கம் அதிகரித்து, மாணவர்கள்கூட போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி விட்டனர். ஒன்லைன் சூதாட்டத்தை தடை செய்ய அ. தி. மு. க. ஆட்சியில் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதனால், அதை எதிர்த்து நிறுவனங்கள் தொடர்ந்த வழக்கை சரியாக கையாளாததால், நீதிமன்றம் புதிய சட்டம் கொண்டு வர அறிவுறுத்தியுள்ளது. ஒன்லைன் ரம்மியால் பலர் தற்கொலை செய்து கொண்டுள்ள நிலையில், இதுவரை தடை சட்டம் நிறைவேற்றவில்லைஒன்லைன் ரம்மி தடை குறித்து கருத்துக் கேட்பு கூட்டம் நடத்துவதாகக் கூறுகின்றனர். சூதாட்டத்தை தடை செய்ய யாராவது கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்துவார்களா?

ஒன்லைன் நிறுவனங்கள் ஆண்டுக்கு ரூ.20 ஆயிரம் கோடி சம்பாதிக்கின்றனர். தி. மு. க. அரசுடன் ஒன்லைன் ரம்மி நடத்துவோர் கைகோத்துள்ளனர். அதனால், இதுவரை தடை சட்டம் கொண்டு வரவில்லை - என்றார். (ஐ)

# தம்மிக பெரேரா தலைமையில் பொருளாதார அபிவிருத்தி குழு

கொழும்பு, ஓக. 10

சுதந்திரத்தின் பின்னர் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக விசேட பொருளாதார அபிவிருத்திக் குழுவை உருவாக்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

உருவாக்கப்படவுள்ள உத்தேச அபிவிருத்திக் குழுவின் தலைவராக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும் பிரபல வர்த்தகருமான தம்மிக பெரேராவை நியமிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான பொருளாதார கொள்கையொன்றைத் திட்டமிடுதல், அதனை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகிய முக்கிய பொறுப்புக்கள் மேற்படி குழுவுக்கு ஒப்படைக்கப்படவுள்ளன என்று நிதி அமைச்சின் உயர் அகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாதாந்தம் 800 இற்கும் 900 இற்கும் இடைப்பட்ட அமெரிக்க டொலர் வருமானமாகக் கிடைத்து வந்துள்ள எமது நாட்டின் தற்போதைய நிலையில் அந்தத் தொகை 250 இற்கும் 300 இற்கும் இடைப்பட்ட தொகையாகக் குறைவடைந்துள்ளது.

அதனைத் தெளிவுபடுத்திய அந்த அதிகாரி புதிய அபிவிருத்திக் குழுவின் முக்கிய செயற்பாடு முடிந்தளவு நாட்டுக்கு வெளிநாட்டு செலாவணியைக் கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு நடுநிலை வகிப்பதே என்றும் அவர் தெரிவித்தார்.

புதிய அபிவிருத்திக் குழுவின் தலைவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவருக்குள்ள அதிகாரம் மற்றும் வசதிகள் வழங்கப்படுவதுடன் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான நேரடிப் பங்களிப்பை அவர் வழங்கும் வகையில் அனைத்து வாய்ப்புகளையும் அவருக்கு வழங்க அரசு தயாராகவுள்ளது என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (அ)

### தொடரும் டெங்கு அபாயம்!

# இவ்வாண்டில் 48,777 டெங்கு நோயாளர்கள் அடையாளம்

கொழும்பு, ஓக. 10

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 48,777 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இதுதவிர, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, காலி ஆகிய மாவட்டங்களிலும் அதிகளவான நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூன் மாதத்தில் மாத்திரம் 11 ஆயிரத்து 437 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 916 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சுதத் சமரவீர குறிப்பிட்டார்.(அ)

# எதிர்ப்புக்களை அடக்குவதற்கே அவசரகாலச் சட்டம் நடைமுறை!

### ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் கண்டனம்

ஜெனிவா, ஓக. 10

**2022 ஏப்ரல் 2 முதல் இலங்கை அதிகாரிகள் அமைதியான போராட்டக்காரர்களை ஒடுக்குவதற்கும் பொருளாதார நெருக்கடிக்கு எதிராக குரல் எழுப்புவதற்கும் எதிராக அவசரகாலச் சட்டத்தை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதை ஐக்கிய நாடுகள் மனித உரிமை நிபுணர்கள் கண்டித்துள்ளனர்.**

தலைநகர் கொழும்பிலும் நாடு முழுவதிலும் பல மாதங்களாக நடைபெற்ற வெகுஜனப் போராட்டங்களைத் தொடர்ந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜூலை 15 அன்று பதவி விலகி நாட்டை விட்டு வெளியேறினார்.

அவருக்குப் பின் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 17 ஜூலை 2022 அன்று மற்றுமொரு அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தினார்.

இலங்கை பாராளுமன்றம் 2022 ஜூலை 27ஆம் திகதியன்று தற்போதைய அவசரகால நிலையை மேலும் ஒரு மாதத்திற்கு நீடித்தது.

இதன் மூலம், ஊரடங்கு உத்தரவை விதித்து பாதுகாப்புப் படைகளுக்கும் இராணுவத்திற்கும் பரந்த மற்றும் விருப்பமான அதிகாரங்களை வழங்கும் கட்டளைச் சட்டத்திற்கு பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

இத்தகைய அதிகாரங்கள், நீதிமன்ற மேற்பார்வையின்றி போராட்டக்காரர்களைத் தடுத்து வைப்பதற்கும் தனியார் சொத்துக்களை சோதனை செய்வதற்கும் படையினரை அனுமதிக்கின்றன.

அவசர நடவடிக்கைகளை தவறாகப் பயன்படுத்துவது குறித்து பலமுறை அரசாங்கத்திடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அதில் பலனில்லை.

இந்தநிலையில், அமைதியான ஒன்றுகூடல் மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமைகளை சட்டபூர்வமாகப் பயன்படுத்துவதை மீறும் வகையில் இதுபோன்ற நடவடிக்கைகளை கண்டிப்பதாக நிபுணர்கள் தெரிவித்தனர்.

இந்த அடக்குமுறை நடவடிக்கைகள் உரையாடலுக்கான வழிகளை மேலும் மூடுகின்றன மற்றும் பதற்றங்கள் அதிகரிக்கும் அரசியல் சூழலை ஏற்படுத்துகின்றன என்று நிபுணர்கள் கூறியுள்ளனர்.

மார்ச் 2022 முதல் இலங்கை எதிர்கொள்ளும் பாரதூரமான பொருளாதார நெருக்கடியைக் கையாள்வதில் அரசாங்கத்தின் மீதான அதிருப்தியை வெளிப்படுத்துவதற்காக ஆயிரக்கணக்கானோர் கொழும்பிலும் நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

ஆழமடைந்துவரும் பொருளாதார நெருக்கடி ஊழல் குற்றச்சாட்டுகள் அதிகரித்து வரும் பண வீக்கம் எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் நீடித்த மின்வெட்டு மற்றும் சட்டவிரோத நிதிப் பாய்ச்சலைச் சரியாக நிர்வகிக்கத் தவறியதன் எதிரொலியாக வெகுஜனப் போராட்டங்கள் வேகத்தைப் பெற்றன.

இதன்போது, பாதுகாப்புப் படையினர் அவசரகால நடவடிக்கைகளால் தங்களுக்கு வழங்கப்பட்ட விரிவான அதிகாரங்களைப் பயன்படுத்தி, கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த் தாரைகளை பயன்படுத்தி எதிர்ப்பு இயக்கத்தை ஒடுக்கினர்.

2022 ஜூலை 22 அன்று தலைநகர் கொழும்பில் காலிமுகத்திடலில் உள்ள போராட்டக்காரர்களின் முகாமில் காவல்துறை மற்றும் இராணுவத்தின் கூட்டு நடவடிக்கையின்போது 50 க்கும் மேற் பட்டோர் காயமடைந்தனர். பலர் கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து கடந்த வாரங்களில் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டுள்ளவர்கள், எதிர்ப்பாளர்கள் மற்றும் எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இதனை கண்டித்துள்ள ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள், தேசிய பாதுகாப்பை ஒரு சாக்குப்போக்காக கொண்டு கருத்து வேறுபாடுகளின் வெளிப்பாடுகளை மூடிவிட முடியாது என்று குறிப்பிட்டுள்ளனர்.

மனித உரிமைப் பாதுகாவலர்கள் உள்ளிட்ட போராட்டக்காரர்கள் அமைதியான போராட்டங்களின் பின்னணியில் பாதுகாக்கப்பட வேண்டும் போராட்டங்களில் பங்கேற்பதற்காக குற்றவியல் பொறுப்பை அவர்கள் எதிர்கொள்ளக்கூடாது என்றும் நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் அரசாங்கம் மீண்டும் மீண்டும் அவசரகால நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறும் அதற்குப் பதிலாக பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைக் குறைப்பதற்கு அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் குறித்து இலங்கையர்களுடன் திறந்த மற்றும் உண்மையான உரையாடலை நாடுமாறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை நிபுணர்கள் கோரியுள்ளனர். (அ)

# நிறைவேற்று அதிகாரங்களை கொண்ட பாராளுமன்றக் குழு அமைக்கவேண்டும்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்து

கொழும்பு, ஓக. 09

அதிகாரம் கொண்ட, பலமான நிறைவேற்று குழு முறைமையொன்றை பாராளுமன்றத்தில் ஸ்தாபிப்பதன் மூலம் இந்த பேரழிவில் இருந்து நாட்டை விடுவிக்க நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தேசிய மறுசீரமைப்பு திட்டவரைவுக் குழுவின் விசேட கூட்டம் நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்துள்ளன என பெயரளவில் உலகுக்கு காட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் நாடகங்களுக்கு தாம் உடன்படவில்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், வலுவான நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட பாராளுமன்றக் குழு அமைப்பை நோக்கி நகர்வதன் மூலம் பாராளுமன்றத்தின் 225 பிரதிநிதிகளும் நாட்டை கட்டியெழுப்புவதற்கான வலுவான பங்களிப்பை வழங்க முடியும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டின் நலனுக்காக இக்காரியத்தை மேற்கொள்ளவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடு பாரிய பேரழிவிற்குள்ளாகியுள்ள நேரத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதே எமது அனைவரினதும் நோக்கமாகும் எனவும், ஆனால் இன்றும்கூட இந்த நாட்டு மக்களின் மனித உரிமைகளை மீறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சில மணித்தியாலங்களுக்கு முன்னர் கூட மாணவச் செயற்பாட்டாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இளைய தலைமுறை மர்மமான முறையில் கடத்தப்பட்டவன்னமுள்ளனர் எனவும் கூறினார்.

இந்நாட்டில் இருபது இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு நிவாரணமும் ஊட்டச்சத்து ஆற்றல் தேவைப்பாடு உள்ளதாகவும், அந்த ஊட்டச்சத்துத் தேவையை பூர்த்தி செய்யத் தேவையான அளவு நிதி கூட நாட்டில் இல்லாத நிலை உருவாகி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நாட்டின் தாய்மார்கள், பிள்ளைகள், பிரஜைகள் மற்றும் இளைஞர்களின் முன்னேற்றத்திற்காக விசேட தலையீடு செய்ய வேண்டிய தருணம் வந்துள்ளதாக தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர், இத்தகைய தருணத்தில், நாட்டுக்கு கேடு விளைவிக்கும் எந்த செயற்பாட்டிலும் ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது ஐக்கிய மக்கள் கூட்டணியோ ஈடுபடாது எனவும் தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறல்: படங்கள் வெளியிட்டு பொலிஸ் தேடுதல்

கொழும்பு, ஓக. 10

ஜூலை 9 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற போராட்டத்தின்போது ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி நுழைந்த சம்பவத்துடன் தொடர்புடைய பலரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இதன்படி அதனுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் பலரின் படங்களைப் பொலிஸார் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளனர்.

இந்தப் படங்களில் உள்ள சந்தேகநபர்களை அடையாளம் காணப் பொதுமக்களின் உதவியைப் பொலிஸார் கோரியுள்ளனர்.

குறித்த நபர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் 0718 591559, 0718 085585, 0112 2391358 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கோ அல்லது 1997 என்ற இலக்கத்துக்கோ தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளனர். (அ)



## தெய்வாதீனமாக உயிர்தப்பிய சாரதி!

கொழும்பு, ஒக. 10

எரிபொருள் வரிசையில் காத்திருந்த காரொன்றின்மீது திடீரென, கப்பி விழுந்த நிலையில், சாரதி மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

கொழும்பு மாநகர சபைக்கு அருகில், கட்டட நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கட்டடத்தின் உயரத்தில் இருந்து விழுந்த கம்பியொன்று காரை துளைத்துச் சென்றுள்ளது.

காருக்குள் சாரதி இருந்துள்ளார். எனினும், அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார். (அ)

## வட்டக்கச்சி வைத்தியசாலை மருந்தகம் தீக்கிரையானது!

கிளிநொச்சி, ஒக. 10

கிளிநொச்சி - வட்டக்கச்சி ஆதார வைத்தியசாலையின் மருந்தகம் தீக்கிரையாகியுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த இரவு இடம்பெற்றுள்ளது.

மின்னொழுக்கு காரணமாக குறித்த தீ விபத்து சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் சுகாதார சேவை திணைக்களத் தரப்பில் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## விநியோகத்திற்கு தயாராக 720,000 திரிபோஷா பொதிகள்!

கொழும்பு, ஒக. 10

பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தேவையான திரிபோஷாவை, சுகாதார மற்றும் வைத்திய அதிகாரிகளின் அலுவலகங்கள் ஊடாக, இந்த வாரத்துக்குள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை திரிபோஷா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவிக்கையில்,

சுமார் 720,000 திரிபோஷா பொதிகளை நிறுவனம் தற்போது தயாரித்துள்ளது.

எதிர்வரும் சில வாரங்களில் குழந்தைகளுக்கு தேவையான திரிபோஷாவை உற்பத்தி செய்ய முடியும்-என்றார். (அ)

## நீர் கட்டணத்தை உயர்த்த அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, ஒக. 10

நீர்க் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இதன்போதே நீர்க் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை, அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவால் முன் வைக்கப்பட்டது. அதற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன், மின்சார கட்டணமும் அதிகரிக்கப்படவுள்ளது. (அ)

# கூட்டணியை அசைக்க முயலாதீர்கள் அந்த பருப்பு இந்த நெருப்பில் வேகாது

### மனோ கணேசன் காட்டமான பதிவு



**கொழும்பு, ஒக. 10**

**“தமிழ் முற்போக்கு கூட்டணியையும் அசைக்க யாரும் முயல வேண்டாம். இங்கே அந்த பருப்பு, இந்த நெருப்பில் வேகாது.” இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பில் மனோவின் முகநூல் பதிவு வருமாறு:

தமிழ் முற்போக்கு கூட்டணி, அரசுடன் இணையவோ, அமைச்சு பதவிகள் பெறவோ, தீர்மானிக்கவே இல்லை.

உண்மையில், “நாட்டை கரை சேர்க்க தேசிய சர்வ கட்சி வேலைத்திட்டம்” என்ற தலைப்பில் ஜனாதிபதி விடுத்த அழைப்புக்கான எமது பதில் தொடர்பில், ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள்ளே நாம் கடுமையாக இரவு பகல் உரையாடிக்கொண்டு இருக்கிறோம்.

ஜனாதிபதியை, ஐக்கிய மக்கள் கூட்டணியாக 5ஆம் திகதி சந்தித்தோம். தமிழ் முற்போக்கு கூட்டணியாக 10ஆம் திகதி சந்திக்க உள்ளோம். நாம் பிரதிநிதித்துவம் செய்யும் எமது மக்களின் அபிலாஷை சவால்கள் பற்றி உரையாடுவோம்.

இதற்குள் அமைச்சு பதவிகளுக்காக கூட்டணிக்குள் முரண்பாடு என பொறுப்புள்ள ஊடகங்கள் எழுதுகின்றன.

ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள், “டலசுக்கு எத்தனை பேர், ரணிலுக்கு இத்தனை பேர்” என கும்மி அடித்து, சிரித்து முடித்தாகி விட்டது.

அதை பார்த்து, இப்போ தமிழ் முற்போக்கு கூட்டணியையும் அசைக்க யாரும் முயல வேண்டாம். இங்கே அந்த பருப்பு, இந்த நெருப்பில் வேகாது. நாம் ஒருசேரத்தான் முடிவுகள் எடுப்போம்-என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்த கோடீஸ்வர வர்த்தகர் தப்பி சென்றார்

கொழும்பு, ஒக.10

ஜனாதிபதி மாளிகைக்குள் பலவந்தமாக பிரவேசித்த குழுவில் இருந்த கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அவர் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இந்த தொழிலதிபர், நாட்டின் முன்னணி இரும்புத் தொழில் நிறுவனத்தில் முதலிடம் வகிப்பவர் என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொழிலதிபர் தற்போது ஆபிரிக்க நாடொன்றில் தங்கியிருப்பதாக கூறப்படுகிறது.

ஜனாதிபதி மாளிகைக்குள் வலுக்கட்டாயமாக பிரவேசித்தமை இந்த வர்த்தகர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு.

ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்த தொழிலதிபர் தனது கையடக்கத் தொலைபேசியில் செல்பி எடுத்து சமூக ஊடகங்களில் பகிர்ந்துள்ளார்.

சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்ட புகைப்படங்கள் தற்போது தொழிலதிபருக்கு எதிரான சாட்சியமாக மாறியுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி இல்லத்தில் அத்துமீறி நுழைந்து சொத்துக்களை திருடியமை தொடர்பில் இதுவரை 15 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மாளிகைக்குள் பலவந்தமாக நுழைந்து சேதப் படுத்தியதாக கூறப்படும் 45 பேரை இதுவரை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

இவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்து கதிரையில் இருந்தது, சாப்பிட்டது என்ற குற்றச்சாட்டில் பொது மக்கள் கைது செய்யப்படுவதாக தொழிற்சங்கவாதி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஊடகங்களிடம்

குற்றம்சாட்டியதுடன், பாராளுமன்றத்திற்குள் பொதுச்சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதோ, மத்திய வங்கி ஊழல் உள்ளிட்ட நாட்டைப் படுகுழிக்குள் தள்ளிய ஊழல்கள் குறித்தோ யாரும் தண்டிக்கப் படவில்லையென குற்றம் சுமத்தியிருந்தார். (அ)

# யாழில் சட்டவிரோதமாக முதிரை மரம் ஏற்றிய வாகனம் மோதிப் பொறியியலாளர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஒக. 10

அனுமதிப்பத்திரம் இன்றி முதிரை மரம் ஏற்றி வந்த மகேந்திரா வாகனம் ஒன்று சித்தங்கேணி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அருகில் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் பொறியியலாளர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் 1990 இலக்க அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்தை ஏற்படுத்திய வாகனச் சாரதி வாகனத்துடன் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். மரத்திற்கு அனுமதிப்பத்திரம் இல்லை என்று தெரிந்த பின்னர் சாரதியை தப்பிக்க வைப்பதற்காக, ஏற்றிவரப்பட்ட முதிரை மரங்கள் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் வைத்து வேறு ஒரு வாகனத்துக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப் பட்டது.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞனின் உறவினர்கள் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு எதேச்சையாக செல்லும்போது இவ்வாறு மரங்கள் வேறு வாகனத்தில் ஏற்றுவதை காணொளியாக பதிவு செய்துள்ளனர்.

மரங்களை இடம்மாற்றும் இந்த செயற்பாடு வட்டுக்கோட்டை பொலிஸாரின் உடந்தையிலேயே இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

விபத்தில் சிக்கியவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வரும்நிலையில் வட்டுக்கோட்டை பொலிஸாரின் இவ்வாறான செயற்பாடு பாதிக்கப்பட்டவரின் உறவினர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ)



## இறக்காமம் பிரதேச செயலகத்தில் காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்

அம்பாறை, ஒக. 10

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிக்குட்பட்ட, வரிப்பத்தான்சேனை - 03 கிராம உத்தியோகத்தர் பிரிவில் நீண்டகாலமாகக் குடியிருந்துவரும் மக்களுக்கு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ், புதிதாகக் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் (நளீமி) தலைமையில் நேற்று முன்தினம் திங்கள் கிழமை பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் காணி உத்தியோகத்தர் என்.எல்.எம். மாஹிர் உட்பட காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் பொது மக்களும் கலந்துகொண்டனர். (அ)

# மனித உரிமைகளை பாதுகாக்கவேண்டும்

## மனித உரிமை கண்காணிப்பகம் ஜனாதிபதி ரணிலிடம் கோரிக்கை

கொழும்பு, ஓக. 10

**இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து இலங்கையர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை தனது நிர்வாகம் மேற்கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும் என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.**

**கண்காணிப்பம் நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

அத்துடன் தமது கடிதத்தில் முக்கிய மனித உரிமை கவலைகளை மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோடிட்டுக் காட்டியுள்ளது.

கருத்துச் சுதந்திரம் ஒன்றுகூடல் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்து பாதுகாப்புப் படைகளின் துஷ்பிரயோகங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் அதேவேளை, தகுந்த சமூகப் பாதுகாப்புக் கொள்கைகளை வகுத்து நிலவும் ஊழலைக் கையாள்வதன் மூலம் பொதுமக்களை மேலும் சிரமங்களிலிருந்து பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாரிய சவால்களை எதிர்கொள்கின்றார். எனினும், கடுமையான அவசரகாலச் சட்டங்களை விதிப்பது போராட்டத் தலைவர்களை அரசியல் ரீதியாக கைது செய்தல் மற்றும் செயற்பாட்டாளர் குழுக்கள் மீது தீவிர கண்காணிப்பு ஆகியவை இலங்கையின் பயங்கரமான பிரச்சினைகளைத் தீர்க்காது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியைக் கடைப்பிடித்து நெருக்கடிக்கான மூல காரணங்களை நிவர்த்தி செய்தால் மட்டுமே சர்வதேச பொருளாதார உதவி பயனுள்ளதாக இருக்கும் என்பதில் இலங்கையின் பங்காளி நாடுகள் தெளிவாக உள்ளன.

எனவே, மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து செயற்படுமாறு கோரியுள்ள மீனாட்சி கங்குலி, ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளார்.

- பழிவாங்கல் அல்லது கைதுக்கு அஞ்சாமல் மக்கள் தங்கள் கருத்துக்களை சுதந்திரமாகவும் அமைதியாகவும் வெளிப்படுத்த முடியும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
- தெளிவற்ற அடிப்படை உரிமைகளை மீறும் அவசர கால ஒழுங்குமுறை விதிகளைத் திரும்பப் பெறவேண்டும்
- பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் இயற்றப்படும் வரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தன்னிச்சையாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுவிக்க வேண்டும்.
- பொருளாதார நெருக்கடியின் விளைவுகளிலிருந்து அனைவரின் உரிமைகளையும் பாதுகாக்க தவறான நிர்வாகம் மற்றும் ஊழலைத் தடுக்க புதிய சமூக பாதுகாப்பு அமைப்பை நிறுவ வேண்டும்.
- உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகளின் கூட்டுடன் ஊழல் நிதிகளுக்கான பாதுகாப்பை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில், இலங்கையில் இருந்து திருடப்பட்ட சொத்துக்களை மீட்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் உயர் மட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் மீது சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்தி அதற்குப் பொறுப்பானவர்களை உரிய முறையில் தண்டிக்க வேண்டும். என்று மீனாட்சி கங்குலி வலியுறுத்தியுள்ளார். (அ)

# சுற்றுலாத்துறையினருக்கும் புதிதாக எரிபொருள் அட்டை

கொழும்பு, ஓக. 10

சுற்றுலாத்துறையின் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வதற்காக அடுத்த வாரம் புதிய எரிபொருள் அட்டை அறிமுகப்படுத்தப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தேசிய எரிபொருள் அனுமதி கியூ.ஆர் குறித்து நேற்றுக் காலை நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் மேற்படி முறைமை பற்றி அமைச்சர் கூறினார்.

ஒரு தொலைபேசி எண் மூலம் பல வாகனங்களைப் பதிவு செய்தல், சிறப்புத் தேவைப் பிரிவை உருவாக்குதல், வாகனம் அல்லாத எரிபொருள் தேவைகளுக்கான கியூ.ஆர். முறைமை அறிமுகம் உட்பட பல விசேட யோசனைகள் பற்றி இங்கு கலந்துரையாடப்பட்டன. (அ)

# நீதிமன்ற உத்தரவை நான் மீறவே இல்லை

## கூறுகின்றார் சமன் ரத்னப்பிரிய



கொழும்பு, ஓக. 10

போராட்டங்களில் கலந்துகொண்ட போதும் நீதிமன்ற உத்தரவை மீறவில்லை என தொழிற்சங்கங்களின் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்

தொழிற்சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டதில் தனக்கு உடன்பாடு இல்லை என்றும், பொய்யான குற்றச்சாட்டுகள் மற்றும் கருத்துக்களை பரப்பக்கூடாது என்றும் அவர் கூறினார்.

ப்ஸ்டாலினும் அவரும் ஒரே கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றபோதும் தன்னை ஏன் கைது செய்யவில்லை என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும் தான் ஆட்சியை மாற்றக் கோரி மே 28 ஆம் தேதி ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்ட போதும் அந்த கண்டனப் பேரணியில் ஜோசப் ஸ்டாலின் கலந்துகொள்ளவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

போராட்டக்காரர்களுக்கு சில வீதிகளுக்குள் செல்லக் கூடாது என நீதிமன்ற உத்தரவு இருந்தபோதும் அந்த உத்தரவை மீறிய குழுவில் ஸ்டாலினும் இருந்தார் எனவும் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார். (அ)

# தனியார்துறையில் பணிபுரியும் பெண்கள் சட்டத்தில் திருத்தம்



கொழும்பு, ஓக. 10

தனியார் துறையில் பெண்களை மாலை 6 மணிக்கு பின்னர் பணிக்கு அமர்த்தும் கடைகள் மற்றும் அலுவலக பணியாளர்கள் தொடர்பான சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

இலத்திரனியல், கணனி மற்றும் தகவல் தொழிநுட்பத் துறையுடன் தொடர்புடைய நிறுவனங்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# தேநீர், உணவுப் பொதி விலைகள் குறைந்தன

கொழும்பு, ஓக. 10

தேநீரின் விலை 30 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக சிற்றுண்டிச்சாலைகள் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன் சோறு பொதி ஒன்றின் விலையும் 10 வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளதாக சங்கம் அறிவித்துள்ளது.

எரிவாயுக் கொள்கலன்களில் ஏற்படுத்தப்பட்ட குறைப்பை அடுத்தே இந்த விலை குறைப்பை தாம் மேற்கொள்வதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (அ)

# மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு பொதுப் பயன்பாட்டு குழு அனுமதி!

கொழும்பு, ஓக.10

இலங்கையில் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதன் அடிப்படையில் தற்போது உள்ள கட்டணம் 75 வீதத்தால் அதிகரிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று தொடக்கம் குறித்த அதிகரிப்பு நடைமுறைக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பாடசாலை மாணவர்களை ஏற்றி சென்ற லொறி விபத்து!

## 14 சிறுவர்கள் வைத்தியசாலையில்

கொழும்பு, ஓக. 10

பிபில பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற சிறிய லொறி ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த 14 சிறுவர்கள் சிகிச்சைக்காக பிபில ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிபில கனுல்வெல முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர் குழுவொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விளையாட்டு நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக மாணவர்கள் குழு வெல்லஸ தேசிய பாடசாலைக்கு நேற்று காலை சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியாத காரணத்தினால், குறித்த மாணவர்கள் குழு இவ்வாறு லொறியில் பயணித்தபோதே விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

ஈழநாடு



# சென்னையில் அமெரிக்க போர்க்கப்பல்! இலங்கை வரத் துடிக்கும் சீன உளவுக்கப்பல்!!

## இந்திய பெருங்கடலில் உலக அரசியல்

**விஷ்ணுப்ரியா ராஜசேகர்**

சீன செயற்கைக்கோள் கண்காணிப்புக் கப்பலான "யுவான் வாங் 5" இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வர உத்தேசித்துள்ள நிலையில், இந்திய அழுத்தம் காரணமாக அதன் வருகை தற்காலிகமாக தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில், இந்தியாவின் சென்னை புறநகர் பகுதியான காட்டுப்பள்ளி துறைமுகத்தில் எல் அண்ட் டீ கப்பல் கட்டுமான தளத்துக்கு அமெரிக்க கடற்படை கப்பலான சார்ல்ஸ் ட்ரூ ஒன்று வந்துள்ளது. "பழுதுபார்ப்புப் பணி" என்ற பெயரில் அமெரிக்க போர்க் கப்பல் ஒன்று இந்தியாவுக்கு வந்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

இலங்கையின் ஹம்பாந்தோட்டைக்கு வர ஆர்வம் காட்டும் சீன செயற்கைக்கோள் கப்பலும், சென்னையில் அமெரிக்க கடற்படையின் போர்க்கப்பல் வந்திருப்பதும் தற்செயல் நிகழ்வா அல்லது இரு பெரும் வல்லரசுகள் இந்திய பெருங்கடலை வைத்து தங்களுடைய கேந்திர அரசியலை வெளிப்படுத்துகின்றனவா என்ற சந்தேகம் இந்த விவகாரத்தில் எழுகிறது.

**என்ன நடக்கிறது?**

இந்தியாவின் "மேக் இன் இந்தியா" திட்டத்திற்கு வலுசேர்க்கும் விதமாகவும், பாதுகாப்புத் துறையில் தன்னிறைவு என்ற கொள்கைக்கு வலுசேர்க்கும் விதமாகவும் இந்திய அமெரிக்க கேந்திர கூட்ட ணியை வலுப்படுத்தும் வகையிலும் அமெரிக்க கடற்படை கப்பலான "சார்லஸ் ட்ரூ" (Charles Drew) சென்னையில் உள்ள காட்டுப்பள்ளி துறைமுகத்திற்கு ஆகஸ்டு 7ஆம் திகதி பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக வந்துள்ளது.

அமெரிக்க கடற்படை கப்பல் ஒன்று சீரமைப்பு பணிகளுக்காக இந்தியா வருவது இதுவே முதல் முறை. இந்த கப்பல் சென்னை எண்ணூரில் உள்ள காட்டுப்பள்ளி கப்பல் தளத்தில் 11 நாட்களுக்கு நிறுத்தப்பட்டு பல்வேறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என்று இந்திய பாதுகாப்புத்துறை கூறியிருக்கிறது.

சர்வதேச கப்பல் கட்டுமானம் மற்றும் சீரமைப்பு சந்தையில் இந்தியாவின் கப்பல் தளத்திற்கு இருக்கும் முக்கியத்துவத்தை இது காட்டுகிறது என்று இந்தியா பெருமிதம் தெரிவித்து செய்திக்குறிப்பு ஒன்றையும் வெளியிட்டிருக்கிறது. மேலும் நவீன கடல்சார் தொழில் நுட்பங்களை கொண்டு இந்திய கப்பல் கட்டும் தளம் கப்பல்களை சீரமைத்தல் மற்றும் பராமரிப்புப் பணியை குறைந்த செலவில் திறம்பட வழங்குகிறது என்றும் இந்தியா அந்த செய்திக்குறிப்பில் கூறியுள்ளது.

அசாதாரணமாக வந்துள்ள உலகின் மிகப்பெரிய வல்லரசின் போர்க்கப்பல் என்பதால் அதன் சென்னை வருகையை இந்திய பாதுகாப்புத்துறைச் செயலாளர் அஜய் குமார், கடற்படை துணைத் தளபதி, கடலோர காவல் படை அதிகாரிகள் உள்ளிட்டோர் வரவேற்றுள்ளனர்.

இது குறித்து பேசிய இந்திய பாதுகாப்புத் துறை செயலர் அஜய் குமார், "அமெரிக்காவின் கடற்படை கப்பலான சார்லஸ் ட்ரூவை வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். இந்தியாவின் இந்த முன்னெடுப்பை இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கு இடையிலான உறவை வலுப்படுத்துவதற்கான முக்கிய நடவடிக்கையாக பார்க்கிறோம். இரு நாடுகளும் இணைந்து மேலும் பல நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான தொடக்கமாக இது உள்ளது" என தெரிவித்தார்.

**இலங்கை வரும் சீன கப்பல்**

வங்காள விரிகுடா கடல் பகுதியில் அமெரிக்க போர்க் கப்பல் நங்கூரமிட் டிருக்க, இந்திய பெருங்கடல் பகுதி நோக்கி தென் சீன கடல் வழியாக சீனாவின் யுவான் வாங் - 5 கப்பல் வந்து கொண்டிருக்கிறது. ஆனால், அந்த கப்பலின் இலங்கை துறைமுக வருகை இந்திய பெருங்கடல் பகுதியில் அச்சுறுத்தலாகலாம் என்ற கவலையை இந்தியா கடந்த இரண்டு வாரங்களாக வெளிப்படுத்தி வருகிறது.

அமெரிக்காவும் இந்த விவகாரத்தில் தனது எச்சரிக்கையை விடுத்துள்ளது. சீனாவின் யுவான் வாங் - 5 கப்பல், விண்வெளி மற்றும் செயற்கைக் கோள் கண் காணிப்புக்காக பயன்படுத்தப்படுவதாக அடையா ளப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனங்களே நிர்வகிக்க குத்தகை எடுத்துள்ளன. அந்த வகையில், சீன செயற்கைக்கோள் கப்பல், இலங்கையில் நிலைநிறுத்தப்படுவதன் மூலம், இந்தியாவின் தென்கோடி கேந்திர கடலோர பாதுகாப்பு அமைப்புகள், தாக்குதல் வியூகங்கள் போன்ற தகவல்களை துல்லியமாக சீன செயற்கைக்கோள் கப்பலால் பதிவு செய்ய முடியும் என்று பாதுகாப்பு வல்லுநர்கள் சந்தேகம் எழுப்புகின்றனர்.



அந்த கப்பல், செயற்கைக்கோள் கண்காணிப்பு கப்பல் என்ற பெய ரில் வரும் உளவுக்கப்பல் என்பது இந்தியாவின் வாதம். அதுவும், யுவான் வாங் - 5, ஆகஸ்டு 11ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முதல் கடும் பொருளாதார நெருக்கடி நிலவி வருகிறது. ஏற்கெனவே சீனாவிடம் இலங்கை பெரும் கடன் பெற்றிருந்தாலும், நெருக்கடி நேரத்தில் இலங்கைக்கு இந்தியா மனிதாபிமான உதவி களை வழங்கி வருகிறது.

அந்த வகையில், இலங்கைக்கு இந்தியா, சீனா ஆகிய இரு நாடு களின் உதவியும் தேவையாக இருக்கும் பட்சத்தில் சீன கப்பலுக்கு அனு மதி வழங்கினால், இந்தியாவின் அதிருப்திக்கு ஆளாக நேரிடலாம் என்ற நிலைக்கு இலங்கை ஜனாதி பதி ரணில் விக்ரமசிங்க தள்ளப் பட்டுள்ளார். அதேபோல, சீன கப் பலுக்கு அனுமதி வழங்காவிட் டால் அது சீன, இலங்கை உறவில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்ற கவலையும் ரணிலுக்கு உள்ளது.

**பதில் நடவடிக்கையா?**

இந்த சூழலில்தான் சீரமைப்பு பணிகளுக்காக முதன்முறையாக இந்தியா வந்துள்ளது அமெரிக்க கப்பற்படை கப்பல். இந்த கப்பல் குறைந்தது 11 நாட்களுக்கு சென்னை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் என்பதால், சீனாவுக்கு போட்டியாக இது இருக் குமோ என்ற சந் தேகத்தை சிலர் எழுப்புகின்றனர்.

ஆனால், பாது காப்புத்துறை தகவல்களை வழங்கி வரும் டிஃபன்ஸ் கேப் பிடல் இதழின் ஆசிரியர் என்.சி. பிபிந்திரா, இந்த இரு விஷயங்க ளையும் ஒன் றுக்கு ஒன்று தொடர்பு படுத்த வேண்டாம் என்கிறார்.

சீன கப்பல் இலங்கை வர திட்டமிடுவதற்கும் அமெரிக்க கப்பல் இந்தியா வந்ததற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று நம்புவதாக அவர் கூறுகிறார்.

"காட்டுப்பள்ளியில் கப்பல் சீரமைக்கும் வசதிகள் உள்ளன. அதற்காக மட்டுமே அமெரிக்க கப்பல் வந்துள்ளது. சில வருடங்களுக்கு முன்பே இந்தியாவும் அமெரிக்காவும் இதற்காக பரஸ்பர ஒப்பந்தத்தை செய்து கொண்டுள்ளன. அதன் அடிப்படையிலேயே அமெரிக்க கடற்படை கப்பல் இந்தியாவுக்கு வந்துள்ளது," என்கிறார் பிபிந்திரா.

தனது நிலைப்பாட்டை நியாயப் படுத்தும் வகையில் ஒரு பின்னணியையும் அவர் குறிப்பிடுகிறார்.

"பசிஃபிக் பிராந்திய பாதுகாப்பு என்ற ரீதியில் இந்த விஷயத்தை அணு கினால், இந்தியா, அமெரிக்காவுக்கு இடையேயான ஒத்துழைப்பு இந்த போர்க் கப்பலின் வருகை மூலம் மேலும் வலுவடைந்துள்ளது. இந்திய பசிஃபிக் பிராந்தியத்தில், பிற ஜனநாயக நாடுகளுக்கு சீனாவிடமிருந்துதான் அச்சுறுத்தல் வருகிறது. அந்த கண் ணோட்டத்தில் பார்த்தால் அமெரிக்க கப்பல் சீரமைப்புப் பணி இந்தியாவில் நடப்பது ஒரு முக்கிய நகர்வாக இருக்கும். அதே சமயம் சீன கப்பல் வருகை யுடன் அமெரிக்க போர்க்கப்பல் வருகையை நேரடியாக தொடர்புபடுத்த முடியாது. ஏனென்றால் இது நீண்ட நாட்களுக்கு முன்னதாகவே ஏற்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடக்கும் தற்செயலான நிகழ்வு," என்கிறார் அவர்.

**"இந்திய கப்பல் கட்டுமான திறன் அதிகரித்துள்ளது"**

சென்னை காட்டுப்பள்ளிக்கு அமெரிக்க கப்பல் வந்துள்ள நாளை பொன்னெழுத்தில் பொறிக்க வேண்டும் என்கிறார் இந்திய பாதுகாப் புத்துறை செயலாளர் அஜய்குமார்.

"இந்தியாவின் கப்பல் கட்டுமான திறனும், சீரமைக்கும் திறனும் கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்துள்ளன. இந்திய கடற்படைக்கு தேவையான 42 போர்க் கப்பல் களில் 40 கப்பல்கள் இந்தியாவி லேயே தயாரிக்கப்பட்டவை. இது இந்திய கப்பல் கட்டுமானத் திறன்கள் வளர்ந்து வருவதை காட்டுகிறது. அதேபோல அமெ ரிக்க கப்பல் இங்கு சீரமைப்பு பணிகளுக்கு வருவது இந்தியா கப்பல் கட்டுமானத்திலும் கப்பல்கள் பராமரிப்பிலும் வளர்ந்து வருகிறது என்பதை உணர்த்துகிறது."

நட்பு நாடுகளுக்கு கப்பல் கட்டும் பணிகள் இந்தியாவில் பரவலாக நடைபெற்று வருகின்றன. எனவே வர்த்தக ரீதியாக பார்க்கப் போனால் கப்பல் கட்டுமான சந்தையில் இந்தியாவிற்கு இது முக்கிய இடத்தை வழங்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக இருக்கும். சீனா, தென் கொரியா போன்ற நாடுகள் கப்பல் கட்டுமானத்தில் முன்னணி வகிக்கின்றன. இனி இந்தியாவும் நவீன கப்பல்களை கட்டமைக்கும் நாடுகளின் பட்டியலில் விரைவில் சேரும்." என்கிறார் பிபிந்திரா.

இந்தியாவில் இருக்கும் ஆறு முக்கிய கப்பல் கட்டுமான தளங்களின் மூலம் நாடு சுமார் 2 பில்லியன் அமெரிக்க டாலர்கள் லாபம் ஈட்டி வருகிறது. இந்த தகவலை சென்னை நிகழ்வின்போது பதிவு செய்தார் இந்திய பாதுகாப்புத்துறை செயலர் அஜய் குமார்.

"இந்த மாதிரியான வெளிநாட்டு கப்பல்களின் வருகைகள், ஓரிரு நாட்களுக்கு முன்னதாக திட்டமிடப்படும் ஒரு நடவடிக்கை அல்ல. எனவே இந்தியாவில் அமெரிக்க கப்பலும், இலங்கையில் சீன கப்பல் உத்தேச வருகையும் தற்செயலாகக்கூட இருக்கலாம். ஆனால், இந்த இரண்டுக்கும் மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது," என்கிறார் இந்திய விமான படையின் முன்னாள் உயரதிகாரியான ஏர் வைஸ் மார்ஷெல் (ஓய்வு) கபில் கக்.

தென் சீன கடல் பகுதியில் தனது நட்பு நாடுகளான மலேசியா, சிங்கப்பூர், ஹாங்காங் பிராந்தியம், தாய்வான் போன்றவற்றில் சீனாவின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. இந்த நிலையில் இந்திய பெருங்கடலில் கால்



பதிக்க வேண்டும் என்ற தமது நெடுநாள் நோக்கத்தை சீனா நிறைவேற்ற பல வழிகளில் முயன்று வருகிறது.

அமெரிக்கா, இந்தியா இடையே மேற்கொள்ளப் பட்ட பாதுகாப்புத் துறை ஒத்துழைப்பு ஒப்பந்தம், இந்திய குடியரசு தலைவராக பிரணாப் முகர்ஜி இருந்த போது கையெழுத்தானது. அதற்கு முன்பு 2016ஆம் ஆண்டு போக்குவரத்து பரிமாற்ற ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி இரு நாடுகளும் பரஸ்பரம் அவற்றில் உள்ள விமான தளங்கள் மற்றும் துறைமுகங்களில் உள்ள சேவைகளை பயன்படுத்திக் கொள்ளலாம், எரி பொருளை நிரப்பிக் கொள்ளலாம். இது இந்திய - அமெரிக்க கடற்படை கூட்டு நடவடிக்கைகளை வலுப் படுத்த உதவும் ஒரு ஒப்பந்தமாகும் என்கிறார் கபில் கக்.

"அமெரிக்க கப்பலின் வருகை வெறும் ஒரு சீரமைப்பு பணி இதற்கும் உளவுப் பார்த்தலுக்கும் எந்த தொடர்பும் இல்லை. ஆனால் இலங்கை வரும் சீன கப்பல் உளவு தகவலை சேகரிக்கும் ஒரு கப்பல். இலங்கை துறைமுகத்தை ஒட்டியுள்ள துறைமுகங்கள் குறித்த பல்வேறு தகவல்களை அதனால் சேகரிக்க முடியும்." என்கிறார் அவர்.

"சீன கப்பல் சீரமைக்கும் பணிகளுக்காக இலங்கை வருவது என்றால் அதில் எந்த ஆட்சேபனையும் இருக்காது. சீனா இதற்கு முந்தைய காலங்களில் நீர் மூழ்கி கப்பல்களை அனுப்பியது. தற்போது உளவு கப்பலை இலங்கை துறைமுக பகுதியில் நிறுத்த திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் நெருக்கடி காலத்தில் இந்தியா அத்தனை உதவிகளை செய்ததற்கு மத்தியிலும் தனது துறைமுகத்தில் ஒரு சீன உளவுக் கப்பலுக்கு இலங்கை அனுமதி வழங்கியுள்ளது. இந்தியா அதனை நிச்சயம் அனுமதிக்காது." என்றார் கபில் கக். (09 ஆம் பக்கம் பார்க்க...)

# கனடாவின் மூத்த தமிழ் இதழ் தமிழர் தகவலின் முப்பதாவது ஆண்டு விருது விழா!




கனடாவிலிருந்து 1991 பெப்ரவரி மாதம் முதல் மாதம் தவறாது வெளிவரும் கனடிய மூத்த தமிழ் இதழான தமிழர் தகவலின் முப்பதாவது ஆண்டு பூர்த்தி நிகழ்வு ரொறன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபா பீடத்தில் அண்மையில் இடம்பெற்றது. இளையவர்களுக்கு முதன்மை அளிக்கும் வகையில் இடம்பெற்ற இவ்விழாவில் முதல் அமர்வுக்கு வளர்ந்து வரும் நாட்டியக் கலைஞர் ஐஸ்வரியா சந்துரு தலைமை தாங்கினார். தொடக்க உரையை செல்வன் அக்சே ஜெயபாலசிங்கம் நிகழ்த்த தமிழ்த்தாய் வாழ்த்தை செல்வன் கிரிசன் தனஞ்செயன் இசைத்தார்.

தமிழர் தகவலின் முப்பதாவது ஆண்டு மலர் 220 பக்கங்களில் 76 கட்டுரைகளுடன் இளமகிழ் சுவடு என்ற மகுடத்தில் வெளியீடப்பெற்றது. ரொறன்ரோ கல்விச்சபையின் பன்மொழி கல்வித் திட்ட அலுவலர் திரு. பொன்னையா விவேகானந்தன் மலரை வெளியிட்டு வைத்து உரையாற்றினார். புலம்பெயர்ந்து பரந்து உலகெங்கும் வாழும் தமிழரின் வாழ்வியலை எடுத்துக்கூறும் வகையிலான இம்மலரில் 25 கட்டுரைகள் இளையோரால் எழுதப்பெற்றிருப்பது வரலாற்றுப் பதிவுக்குரியதென தமது உரையில் இவர் குறிப்பிட்டார்.

தமிழர் தகவல் பொதுமுகாமையாளர் திரு. ஆர். ஆர்.ராஜ்குமார் வரவேற்புரை வழங்கினார். விழாவின் சிறப்பு விருந்தினராக ஐ.பி.சி. தமிழ் மூத்த ஒலிபரப்பாளர் எஸ்.கே.ராஜெனும், முதன்மை விருந்தினராக அன்பு அறிவிப்பாளர் திரு. பி.எச். அப்துல் ஹமீதும் கலந்து உரையாற்றினர். தமிழர் தகவல் சஞ்சிகை புலம்பெயர்ந்து வாழும் அனைத்து நாட்டு தமிழரையும் இணைக்கும் பாலமாக விளங்குவதாக சுட்டிக்காட்டிய இவர்கள், கனடிய இளைய தலைமுறையினர் தமிழ் மொழி மீது ஆற்றல் மிக்கவர்களாக இருப்பதை பார்க்கும்போது இங்கு தமிழ் நீட்சி பெற்று வாழும் என்பதை அறியக்கூடியதாக இருப்பதாக தெரிவித்து பாராட்டி வாழ்த்தினர்.

முதற்பிரதிகளை தகவலின் உதவி ஆசிரியரும் வரைகலை நிபுணருமான திரு. சசிகரன் பத்மநாதன் இரண்டு இளம் எழுத்தாளர்களுக்கும் மூத்த எழுத்தாளர் ஒருவருக்கும் வழங்கி மதிப்பளித்தார்.

ஐம்பதாண்டுகளுக்கு மேலாக அறாத்தொடராக ஊடகப் பணியாற்றி வரும் மூத்த ஊடகவியலாளர் திரு எஸ்.திருச்செல்வம் தமிழர் தகவலின் முதன்மை ஆசிரியராக பணியாற்றி வருகிறார். அகிலன் அசோக்ஷியேற்ஸ் நிறுவனம் தமிழர் தகவலை வெளியிட்டு வருகிறது.

இரண்டாவது அமர்வுக்கு சமூக செயற்பாட்டாளரும் இளம் அரசியல் முன்னோடியுமான திரு. நீதன் சண்முகராஜா தலைமை தாங்கினார். ஒன்ராறியோ மாகாண நிதி அமைச்சர் பீற்றர் பெதலன்பல்வி, மாகாண அரசின் பிரதி நிதிகள் விஜே தணிகாசலம், டொலி பெகம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து வாழ்த்துரைகள் வழங்கி விருதுகளையும் கையளித்தனர்.

பன்முக சிறப்புப் பெற்ற எண்மர் இவ்வருடம் தமிழர் தகவல் விருதுடன் தங்கப் பதக்கம் சூட்டி மதிப்பளிக்கப்பட்டனர். பேராசிரியர் அமுது ஜோசப் சந்திரகாந்தன் தலைமையிலான மதிப்பாளர் குழு விருதாளர்களை தெரிவு செய்தது.

அமெரிக்காவின் ஜோர்ஜியா மாநிலத்தில் குடல் புற்றுநோய் மருத்துவராகப் பணியாற்றும் பேராசிரியர் இந்திரன் பி. இந்திரகிருக்ஷ்ணனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. ரொறன்ரோ பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் முதன்நிலை மாணவியாகத் திகழும் செல்வி. சிந்து செந்தில்மோகன் இளம் சாதனையாளர் விருதினைப் பெற்றார்.

சிறீமதி ரஜனி மதிவர்ணன் (நடனம்), திரு. ஃபயஸ் க்ஷவாகிர் (வாத்திய இசை), திரு. சண்முகராஜா சின்னத் தம்பி (தமிழ் இலக்கியப் பணி), திரு. சிவசுப்பிர மணியம் கணபதிப் பிள்ளை (சமூக சேவை), திரு.செந்தி செல்லையா (தமிழன் வழிகாட்டி வணிக முன்னோடி), திரு. ரவி கனகசபை (முன்னணி வணிகத்துறை சாதனை) ஆகியோர் இவ்வருட விருதினைப் பெற்றனர்.

இவர்களுக்கு கனடிய அரசாங்கத்தின் சான்றுப் பட்டயமும் வழங்கப்பட்டது. கனடிய தேசிய கீதத்தை செல்வி கிசூரி ராஜ்குமார் வயலின் இசை வழியாக வழங்கியதுடன் விழா நிறைவுபெற்றது.

# சென்னையில் அமெரிக்க போர்க்கப்பல்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

யுவான் வாங் - 5 கப்பலை இலங்கையில் நிறுத்துவதை தவிர்க்க வேண்டும் என இலங்கை வெளியுறவுத் துறை அதிகாரிகள் கடந்த 5ஆம் திகதி சீனாவிடம் கேட்டுக் கொண்டனர். இந்நிலையில் இலங்கை அதிகாரிகளிடம் இது குறித்து பேச வேண்டும் என சீனா தற்போது தெரிவித்துள்ளது.

**சந்தேகம் என்ன?**

உலகின் பெரும் வல்லரசுகளாக கருதப்படும் முதல் மூன்று நாடுகளில் அமெரிக்கா, ரஷ்யா, சீனா உள்ளன. இதில், இந்த மூன்று நாடுகளுடன் இணக்கமான வர்த்தக உறவை இந்தியா பேணி வருகிறது. மறுபுறம், சீனாவும், ரஷ்யாவும் நெருங்கிய கூட்டாளிகளாகவும் பாதுகாப்பு ஒத்துழைப்பில் நெருக்கமான உறவையும் கொண்டுள்ளன.

கடந்த ஆண்டு ரஷ்யா, யுக்ரேன் இடையே ஏற்பட்ட போர் தீவிரம் அடைந்த பிறகு ரஷ்ய சார்பு செயல்பாடுகளை இந்தியா குறைத்துள்ளது. ரஷ்யாவிடம் இந்தியா வாங்கும் பாதுகாப்புப்படைகளுக்கான ஆயுதங்களின் எண்ணிக்கையும் குறைந்தன. தற்போது பிரான்ஸிடம் இருந்து ரஃபால் விமானம், இஸ்ரேலிடம் இருந்து நவீன இயந்திர துப்பாக்கிகள், அமெரிக்காவிடம் இருந்து பாதுகாப்பு தொழில்நுட்ப தகவல் பரிமாற்றம் போன்ற செயல்பாடுகளில் இந்தியா அதிக அக்கறை காட்டி வருகிறது.

“இந்தப் பின்னணியில் ரஷ்யாவுடன் நெருக்கமாக இருக்கும் சீனா, இந்தியாவுக்கு வெகு அருகே உள்ள இலங்கையில் செல்வாக்கை செலுத்தும் போக்கை அமெரிக்கா விரும்பாமல் இருக்கலாம் என்ற கருத்து பொதுவாகவே நிலவுகிறது. அந்த வகையில், இலங்கைக்கு நட்பு நாடாக விளங்கும் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உறவை வலுப்படுத்திக் கொள்ள அமெரிக்க முயலலாம். அதன் மூலம் சீனாவுக்கு சவாலாக இந்திய பெருங்கடல் களத்தில் அமெரிக்கா இருப்பதை காட்டிக் கொள்ள அந்த நாடு இந்திய பெருங்கடல் பகுதிக்கு வந்திருக்கலாம்,” என்று பாதுகாப்புத்துறை உளவு வட்டாரங்களில் கூறப்படுகிறது.

காரணம், சென்னை காட்டுப்பள்ளி துறைமுகத்துக்கு முன்பே திட்டமிட்டபடிதான் அமெரிக்க கடற்படை கப்பல் வந்துள்ளதாக கூறப்பட்டாலும், அந்த கப்பல், இத்தனை நாட்களாக எங்கு இருந்தது, எந்த கடல் வழியைப் பயன்படுத்தி அது இந்திய பெருங்கடலுக்குள்ளும் பிறகு வங்காள விரிகுடாவுக்கும் வந்தது போன்ற விவரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. இந்த தகவல்களை இந்திய பாதுகாப்புத்துறையிடம் இருந்து கேட்டுப்பெற முயன்றபோதும் அது பலனளிக்கவில்லை.

**“இந்தியா அன்றும் இன்றும்”**

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் பெர்ஷிய வளைகுடாவில் இருந்து மலாக்கா நீரிணை வழியாக இந்தியாவின் லட்சத்தீவுகளின் மேற்குப் பகுதிக்கு “கடல் போக்குவரத்து நடவடிக்கை” என்ற பெயரில் அமெரிக்க போர்க் கப்பலான ஜான் பால் ஜோன்ஸ் (டிடிஜி 54) வருவதாக அறிவித்தபோது, தற்போது காட்டும் இணக்கமான அணுகுமுறையை அன்றைக்கு இந்தியா காட்டவில்லை.

இந்த அறிவிப்பை அமெரிக்க போர்க்கப்பல் வெளியிட்டபோது, லட்சத்தீவுகளுக்கு 130 கடல் மைல் தூரத்தில் அது இருந்தது.

ஆனால், அமெரிக்காவின் இந்த அணுகுமுறையை இந்தியா அப்போது எதிர்பார்க்கவில்லை. உள்நாட்டிலும் அந்த போர்க்கப்பல் நுழைவதற்கு கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, “இரு தரப்பிலும் ராணுவ ஒத்துழைப்பு வலுப்பெற்று வந்தாலும், இந்தியாவின் பிரத்யேக பொருளாதார மண்டல பகுதிக்குள் அமெரிக்க போர்க் கப்பல் முன்னனுமதியின்றி வர உத்தேசித்திருப்பது சர்வதேச கடல் சட்டம் தொடர்பான ஐ.நா சாசனத்துக்கு உகந்ததாக இல்லை,” என்ற கவலையை இந்திய வெளியுறவுத்துறை அமெரிக்காவிடம் ராஜீய முறையில் தெரிவித்தது.

**அமெரிக்கா கோரிய சர்வதேச கடல் பயண நடவடிக்கை உரிமை**

கடைசியில், இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்த அமெரிக்க போர்க்கப்பல் பின்வாங்கிச் சென்றது. புறப்படும் முன்பாக அந்த போர்க்கப்பல் தளபதி வெளியிட்ட செய்திக்குறிப்பில், “யுஎஸ்எஸ் ஜான் பால் ஜோன்ஸ் (டிடிஜி 53) இந்தியாவின் பிரத்யேக பொருளாதார மண்டலத்திற்குள், லட்சத்தீவுகளுக்கு மேற்கே சுமார் 130 கடல் மைல் தொலைவில், இந்தியாவின் முன் அனுமதியைக் கோராமல், சர்வதேச சட்டத்திற்கு இணங்க, தனது வழிசெலுத்தல் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தைப் பயன்படுத்தியது.”

“ஆனால், இந்தியா தனது பிரத்யேக பொருளாதார மண்டலம் அல்லது கடல் பகுதியில் ராணுவ ஒத்திகைகள் அல்லது நடமாட்டத்துக்கு முன் அனுமதி தேவை என்று கூறியுள்ளது. இந்த கூற்று சர்வதேச சட்டத்திற்கு முரணானது. இந்த சுதந்திரமான வழிசெலுத்தல் செயல்பாடு என்பது, சர்வதேச சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட கடல் வழி உரிமைகள், சுதந்திரம் மற்றும் சட்டபூர்வ பயன்பாடுகளைக் கொண்டது. அதை மீறும் வகையில் இந்தியாவின் கடல்சார் உரிமை கோரல்கள் உள்ளன” என்று செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருந்தது.

“இந்திய - பசிஃபிக் கடல் பிராந்தியத்தில் அமெரிக்க படைகள் அன்றாடம் செயல்படுகின்றன. அவற்றின் அனைத்து நடவடிக்கைகளும் சர்வதேச சட்டத்தின்படி வடிவமைக்கப்பட்டுள்ளன, மேலும் சர்வதேச சட்டம் அனுமதிக்கும் இடத்தில் அமெரிக்கா பறக்கும், பயணம் செய்யும் மற்றும் செயல்படும் என்பதை இது உணர்த்துகிறது. நாங்கள் கடந்த காலத்தில் செய்ததைப் போலவே, வழக்கமான வழிசெலுத்தல் செயல்பாடுகளை மேற்கொள்கிறோம்.இது, ஒரு குறிப்பிட்ட நாட்டைப் பற்றியதோ அதை வைத்து அரசியல் செய்வதோ அல்ல,” என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.


**இந்திய கடல் சட்டம் என்ன சொல்கிறது?**

“இந்திய சட்டத்தின் கீழ் - பிராந்திய கடல் பகுதி, பிரத்யேக பொருளாதார மண்டலம் மற்றும் பிற கடல்சார் மண்டலங்கள் சட்டம், 1976-இன்படி அனைத்து வெளிநாட்டு கப்பல்களும் (நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் பிற நீருக்கடியில் இயங்கும் வாகனங்கள் உட்பட) இந்தியாவின் அமைதி, நல்ஒழுங்கு அல்லது பாதுகாப்புக்கு பாதகமாக இல்லாத வரையில் பிராந்திய கடல் வழியாக செல்லும் உரிமையை அனுபவிக்கலாம். ஆனால், அவ்வாறு வரும் கப்பல்கள் இந்திய அரசின் முன்னனுமதியைப் பெற்றிருக்க வேண்டும்,” என்று சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், கடந்த ஆண்டு அமெரிக்க போர்க்கப்பல் இந்திய கடல் எல்லைக்குள் வந்தபோது காட்டிய ஆட்சேபம், இம்முறை அதேபோன்ற வேறொரு கப்பல் “பழுது பார்ப்பு“ என்ற பெயரில் சென்னைக்கு வந்த போது, அது மேக் இன் இந்தியா திட்டப்படி உருவான கப்பல் கட்டுமான தளத்தின் திறனுக்கு கிடைத்த வாய்ப்பு என்று இந்தியா கூறியிருக்கிறது. இந்த ஒப்பீடுகளைத்தான் விவரம் அறிந்த பாதுகாப்பு ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டி தங்களுடைய சந்தேகத்தை எழுப்புகிறார்கள். **(பிபிசி)**

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..............................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, .............., ............ ii) 18, 15, 12, .............., ............

**21)** | 3, 9, 6, 14, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..............................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

..............................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..............................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3l 300ml பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..............................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? .............................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

..................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



......................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

...................................................... (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)  2)  3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்

1) அபயவாவி 2) இரணைமடுக்குளம் 3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?

1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?

1) சூரியன் 2) வாளேந்திய சிங்கம் 3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?

1) 1976 2) 1851 3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?

1) இறப்பர், வேம்பு 2) இறப்பர், தாழம்பூ 3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6 2) 8 **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130 2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745 **23.** 455
**24.** 1l 100ml / 1100ml **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190 2) 100 3) 290
**27.** 15 : 30 **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1 **31.** 2 **32.** 3
**33.** 2 **34.** 3 **35.** 2

### கல்வி tv CHANNEL-1 — 10.08.2022 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2 — 10.08.2022 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மட்டக்களப்பு வைத்தியசாலையில் கடுமையான இரத்தப் பற்றாக்குறை

## உதிரம் கொடுத்து உயிர்காக்கும் பணிக்கு அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு



**மட்டக்களப்பு, ஓக.10**

**மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி எதிர் நோக்கும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்காக மட்டக்களப்புப் பிரதேசத்தில் வாழும் மக்கள் தம் உதிரத்தை கொடுத்து எமது உடன்பிறப்புகளின் உயிரைக்காக்க முன் வர வேண்டுமென மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி வேண்டுகோள் விடுத்துள்ளது.**

போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியினால் தினமும் சராசரியாக 40 முதல் 50 பைந்த் உதிரம் அவசர தேவையுடைய நோயாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. தற்போ தைய சூழ்நிலையில் இரத்த வங்கியில் குறைந்த அளவிலான உதிரம் மட்டுமே கையிருப்பில் உள்ளதாக வைத்திய சாலையில் கடமையாற்றும் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

முன்பு 700 தொடக்கம் 800 பைந்த் உதிரம் சேமித்து வைக்கப்பட்டு இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தானத்தில் சிறந்த தானம் இரத்த தானம் எனும் அடிப்படையில் ஒரு மனித உயிரினை காப்பாற்றும் பொறுப்பு சக மனிதனின் கடமையாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பல தடவை உதிரம் வழங்கியுள்ளபோதிலும் தற்போதைய தேவை கருதி மீண்டும் அவர்கள் இரத்ததான முகாம்களை நிறுவி உதி ரத்தை சேகரிக்க முன்வரவேண்டுமென எதிர்பார்க்கப்படுவதுடன், உதிரம் கொடுத்து உயிர்காக்கும் உன்னத பணியை இளைஞர், யுவதிகள் அனைவரும் இணைந்து நிறைவேற்ற முன்வர வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# கல்முனை கல்விப் பணிப்பாளராக எம்.எஸ் சஹறதுல் நஜீம் நியமனம்

அம்பாறை, ஓக. 10

கல்முனை வலய கல்விப் பணிப்பாளராக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ் சஹறதுல் நஜீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

மருதமுனையை சேர்ந்த எம்.எஸ் சஹறதுல் நஜீம், இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தர அதிகாரி ஆவார்.

விஞ்ஞான பட்டதாரியான நஜீம் விஞ்ஞான முதுமாணி கல்வி முதுமாணிப் பட்டங்களை பெற்றுள்ளார் . 15 வருட கல்வி நிர்வாக சேவையிலுள்ள நஜீம் இன்று முதல் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளராக பதவி ஏற்கிறார்.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளருக்கான நேர்முகப் பரீட்சை கடந்த ஜூன் மாதம் 16 ஆம் திகதி திருகோணமலையிலுள்ள மாகாண கல்வி அமைச்சில் நடைபெற்றது. நேர்முக தேர்வு முடிவுகள் நேற்று முன்தினம் வெளியானது. அதன்படி இந் நியமனம் இடம்பெற்றது.



2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி இலங்கை கல்வி கல்வி நிர்வாக சேவையிலே இணைந்து கொண்ட அவர் , கடந்த 2019 மூன்றாம் மாதம் 12 ஆம் திகதி தரம் 1 க்கு பதவி உயர்த்தப்பட்டார். (அ)

# கல்முனை மேயருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## கிழக்கு ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவிப்பு!

அம்பாறை, ஓக. 10

கல்முனை மாநகர சபைக்கு நியமிக்கப்படும் ஆணையாளர்கள் பதவியேற்பதை தொடர்ச்சியாக தடுத்து வருகின்ற கல்முனை மேயருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநரினால் கல்முனை மாநகர ஆணையாளராக அண்மையில் நியமிக்கப்பட்ட ஏ.எல்.எம். அஸ்மி நேற்று முன் தினம் திங்கட்கிழமை கடமைகளை பொறுப்பேற்கச் சென்றபோது அவர் கல்முனை மேயரினால் தடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னரும் கல்முனை மாநகர ஆணையாளராக கிழக்கு மாகாண ஆளுநரினால் நியமிக்கப்பட்ட என்.சிவலிங்கம், கடந்த ஏப்ரல் முதலாம் திகதி கடமைகளை பொறுப்பேற்கச் சென்றபோதும் அவரும் தடுக்கப்பட்டார்.

இவ்வாறு தொடர்ச்சியாக கல்முனை மாநகர ஆணையாளர்கள் பதவியேற்காமல் தடுக்கப்படுவது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநரை தொடர்புகொண்டு வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



இது தொடர்பில் ஆளுநர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

மாநகர சபையின் நிர்வாக செயற்பாடுகளில் மேயர் ஒருபோதும் தலையிட முடியாது. தனக்குரிய அதிகாரத்தின் கீழ் மாநகர ஆணையாளர் நியமனத்தை மேற்கொண்டுள்ளேன். இதனை ஒருபோதும் கல்முனை மேயர் சவாலுக்குட்படுத்த முடியாது. இதனால், கல்முனை மாநகர சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள ஆணையாளர் கடமைகளை பொறுப்பேற்க மேயர் அனுமதிக்க வேண்டும்.

அவ்வாறில்லாமல், தொடர்ச்சியாக ஆணையாளர்கள் கடமைகளை பொறுப்பேற்பதற்கு இடையூறு விளைவிக்கப்படும் பட்சத்தில் கல்முனை மேயருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

# நிந்தவூர் பிரதேசத்தில் தொடர் கடல் அரிப்பு

## மீனவர் சங்கக் கட்டடம் சேதம்





அம்பாறை, ஓக. 10

அண்மை நாட்களாக நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள தொடர் கடலரிப்பின் காரணமாக கடலோரத்தை அண்டிய கரையோரங்கள் பாதிக்கப்படுவதுடன் மீனவர்களின் வாடிகள், தென்னை மரங்கள் மற்றும் அவர்களின் பல் தேவைக் கட்டடங்களும் பாதிக்கப்பட்டு நாளுக்கு நாள் கடலினால் அள்ளுண்டு போகின்றன.

குறித்த தொடர் கடலரிப்பின் காரணமாக மீனவர்கள் தங்கள் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் தங்களின் மீன்பிடி சம்பந்தமான விடயங்களை கலந்தாலோசித்துக் கொள்வதற்கும் அவைகளை சிறந்த முறையில் நிர்வகித்துக் கொள்வதற்கும் பல தடங்கல்கள் ஏற்படுத்தப்பட்டு தற்பொழுது அவர்கள் நடு வீதிக்கு வரும் துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளதாகவும் அண்மையில் மீண்டும் திறக்கப்பட்ட ஒலுவில் மீன்பிடி துறைமுகத்தினால் இக்கடலரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் உடனடியாக அதனை மூடும் பட்சத்தில் தொடர் கடலரிப்பை தடுக்க முடியும் என குறிப்பிட்டனர்.

நிந்தவூர் 9ஆம் பிரிவு பிர்தௌஸ் ஜ/ம்ஆ பள்ளிவாசலுக்கு முன்பாகவுள்ள மீனவர்களுக்குச் சொந்தமான மீனவர் சங்கக் கட்டிடம் தொடர் கடலரிப்புக் காரணமாக முழுமையாக உடைந்துள்ளது.

கடந்த காலத்தில் இக்கட்டடம் அமைந்துள்ள பிரதேசத்தில் ஏற்பட்ட கடலரிப்பைத் தடுப்பதற்காக கடலோர பாதுகாப்புத் திணைக்களத்தின் வழிகாட்டலுடன் தற்காலிகமாக மண் மூடைகள் நிரப்பப்பட்டு பாதுகாக்கப்பட்டிருந்தாலும் கடல் அலைகளுக்கு அது தாக்குப்பிடிக்க முடியாமல் அள்ளுண்டு போனது.

ஆனால் இந்தப் பகுதியில் அமைந்துள்ள இந்தக் கட்டிடத்தை நிரந்தரமாக பாதுகாப்பதற்கான எந்த நடவடிக்கைகளையும் நிந்தவூர் பிரதேச செயலகமோ அல்லது கரையோர பாதுகாப்பு திணைக்களமோ அல்லது இப்பிரதேச அரசியல் வாதிகளோ எடுக்கவில்லை என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலை தொடர்ந்து செல்லுமானால் கடைசியில் கடற்கரை வீதியினூடாக பயணம் செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலையும் நிந்தவூர் பிரதேசத்திற்கு ஏற்படும் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். (அ)

# சீனாவுக்குப் பதிலடியாக தாய்வானும் போர் பயிற்சி

## நேற்றுக் காலை நடத்தியது

தாய்பேய்,ஒக.10

**தாய்வானை சுற்றி சீனா தீவிர போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வரும் நிலையில் பதிலடியாக தாய்வானும் போர்ப் பயிற்சியை நேற்றுக் காலை நடத்தியது. போர் பயிற்சி என்ற போர்வையில் தாய்வானை ஆக்கிரமிக்க சீனா தயாராகி வருவதாக தாய்வான் வெளியுறவு அமைச்சர் ஜோசப் வூ குற்றஞ்சாட்டினார். இந்நிலையில் தாய்வானை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.**



அமெரிக்க பாராளுமன்ற சபா நாயகர் நான்சி பெலோசியின் தாய்வான் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்த சீனா, அதற்குப் பதிலடியாக தாய்வானை சுற்றி கடந்த வாரம் போர்ப் பயிற்சிகளை தொடங்கியது.

தாய்வான் சீனாவின் ஒரு பகுதி எனக் கூறி வரும் சீனா, தேவைப் பட்டால் இராணுவ பலத்தை பயன் படுத்தி தாய்வானை கைப்பற்றவும் தயங்கப் போவதில்லை என்று கூறியுள்ளது.

இந்நிலையில் தாய்வான் மீதான படையெடுப்பிற்கு தயாராகவே சீனா போர் பயிற்சிகளை பயன் படுத்தி வருவதாக தாய்வான் வெளியுறவு அமைச்சர் ஜோசப் வூ இன்று செவ்வாய்க்கிழமை காலை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தாய்வானை ஆக்கிரமிப்பதற்காக சாக்குப் போக்காக பெலோசியின் வருகையை பீஜிங் பயன்படுத்துவதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

இவ்வாறான நிலையிலேயே தாய்வான் இன்று காலை இராணுவ போர்ப் பயிற்சியை நடத்தியது. இன்று உள்ளூர் நேரப்படி அதிகாரி 12.40-க்கு ஆரம்பிக்கப்பட்ட போர்ப் பயிற்சி 1.30 மணி வரை இடம்பெற்றதாக தாய்வானின் எட்டாவது இராணுவப் படையின் செய்தித் தொடர்பாளர் லூ வோய்-ஜே கூறினார்.

பிரபலமான கடற்கரை இடமான கென்டிங்கிற்கு செல்லும் சாலை அருகே பீரங்கியால் சுட்டு போர்ப் பயிற்சி முன்னெடுக்கப்பட்டது. வியாழனன்றும் நடைபெறும் இந்த பயிற்சியில் நூற்றுக்கணக்கான துருப்புக்கள் மற்றும் சுமார் 40 ஹோவிட்சர் பீரங்கிகள் ஈடுபடுத்தப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

எனினும் இந்தப் பயிற்சிகள் முன்பே திட்டமிடப்பட்டிருந்ததாகவும், சீனாவின் பயிற்சிகளுக்கு பதிலடி இல்லை என்றும் லூ வோய்-ஜே கூறினார். இதேவேளை, தாய்வான் ஜலசந்தியில் தனது பயிற்சி நேற்று செவ்வாய்க்கிழமை தொடருமா? என்பதை சீனா உறுதிப்படுத்தவில்லை.

இந்நிலையில் சீனா இராணுவப் பயிற்சிகளை தீவு முழுவதும் விரிவுபடுத்தியதற்கு தாய்வான் வெளியுறவு அமைச்சர் ஜோசப் வூ கண்டனம் தெரிவித்தார், அவர்கள் தாய்வான் ஜலசந்தி மற்றும் பரந்த ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் கடற்பரப்பை கட்டுப்படுத்த முயற்சிப்பதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

தாய்வான் பொதுமக்கள் மன உறுதியை பலவீனப்படுத்தும் வகையில் பெரிய அளவிலான இராணுவப் பயிற்சிகள் மற்றும் ஏவுகணை ஏவுதல்கள், சைபர் தாக்குதல்கள், தவறான தகவல் பிரச்சாரம் என்ற குறுக்கு வழிகளை சீனா பயன் படுத்துவதாகவும் தாய்வான் வெளியுறவு அமைச்சர் ஜோசப் வூ குறிப்பிட்டார். (அ)

# இஸ்ரேல் மீது தாக்குதல்!

## பாலஸ்தீன இஸ்லாமிய ஜிகாத் எச்சரிக்கை

ஜெருசலேம், ஒக. 10

இஸ்ரேல் சிறையில் உள்ள தங்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் அனைவரும் விடுதலை

ஸ்ரீ செய்யவேண்டும் என பலஸ்தீன இஸ்லாமிய ஜிகாத் தெரிவித்துள்ளது.

அவ்வாறு விடுதலை செய்யவில்லை என்றால் போர் நிறுத்தத்தை கடைப்பிடிக்கமாட்டோம். இஸ்ரேல் மீது தாக்குதலை தொடர்வோம் என்று அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி பலஸ்தீன இஸ்லாமிய ஜிகாத் அமைப்பை சேர்ந்த மூத்த தளபதி ஹலில் அவாவ்டாவை உடனடியாக விடுவிக்க வேண்டும். மற்றொரு தளபதியான ஷேக் பாஷிம் அல் ஷாதியை 2 வாரத்துக்குள் இஸ்ரேல் விடுதலை செய்ய வேண்டும் என பலஸ்தீனிய இஸ்லாமிய ஜிகாத் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் சிறையில் உள்ள தங்கள் அமைப்பை சேர்ந்தவர்கள் அனைவரும் விடுதலை செய்ய வேண்டும் எனவும் பலஸ்தீன இஸ்லாமிக் ஜிகாத் தெரிவித்துள்ளது.

அவ்வாறு விடுதலை செய்யவில்லை என்றால் இஸ்ரேல் மீது தாக்குதலை தொடர்வோம் என்று பாலஸ்தீனிய இஸ்லாமிய ஜிகாத் எச்சரித்துள்ளது. இதன்மூலம் இஸ்ரேல் - பாலஸ்தீன இஸ்லாமிய ஜிகாத் இடையே மீண்டும் மோதல் ஏற்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வருகிறது. மேற்கு கரை பகுதியை ஹமாஸ் அமைப்பு நிர்வகித்து வருகிறது. ஹமாஸ் அமைப்பை இஸ்ரேல் பயங்கரவாத அமைப்பாக கருதுகிறது. காசா முனையில் ஹமாஸ் மட்டுமின்றி மேலும் சில ஆயுதமேந்திய போராளிக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. அந்த வகையில் காசா முனையில் பாலஸ்தீனிய இஸ்லாமிக் ஜிகாத் செயற்பட்டு வருகிறது.

பலஸ்தீனிய இஸ்லாமிய ஜிகாத் அமைப்பின் மூத்த தளபதியை கடந்த சில நாட்களுக்கு முன் மேற்கு கரையின் ஜெனின் பகுதியில் இஸ்ரேல் கைது செய்தது. இந்த கைதை தொடர்ந்து இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டதாக கூறி காசாவில் பாலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் கடந்த வெள்ளிக்கிழமை முதல் வான்வெளி தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதல்களில் 15 பலஸ்தீன சிறுவர்கள் உட்பட 45 பேர் கொல்லப்பட்டனர் 200-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் மீது காஸா முனையில் இருந்து ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டதால் இரு தரப்புக்கும் இடையே மோதல் நடைபெற்றது.

இந்நிலையில் எகிப்து தலைமையில் நடைபெற்ற அமைதி பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது. இதன்மூலம் இஸ்ரேல்-பலஸ்தீனிய இஸ்லாமிக் ஜிகாத் இடையேயான சண்டை முடிவுக்கு வந்தது. அமைதி ஒப்பந்தம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 11.30 மணி முதல் அமுலுக்கு வரத்தொடங்கியது. இந்த ஒப்பந்தத்தின் படி தங்கள் அமைப்பை சேர்ந்த மூத்த தளபதிகளான ஹலில் அவாவ்டாவை உடனடியாகவும் மற்றொரு தளபதியான ஷேக் பாஷிம் அல் ஷாதியை 2 வாரத்திற்கு உள்ளும் இஸ்ரேல் விடுதலை செய்யவேண்டும் என பலஸ்தீனிய இஸ்லாமிய ஜிகாத் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் சிறையில் உள்ள தங்கள் அமைப்பை சேர்ந்தவர்கள் அனைவரும் விடுதலை செய்ய வேண்டும் அவ்வாறு விடுதலை செய்யவில்லை என்றால் இஸ்ரேல் மீது தாக்குதலை தொடருவோம் என்று பாலஸ்தீனிய இஸ்லாமிய ஜிகாத் தெரிவித்துள்ளது. (அ)

# தென் கொரியாவில் கனமழை; வெள்ளத்தில் சிக்கி 7 பேர் பலி!

சியோல், ஒக. 10



தென் கொரியாவின் தலைநகர் சியோலில் நேற்று முன்தினம் இரவு பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி குறைந்தது 7 பேர் உயிரிழந்துள்ளனர். 9 பேர் காயமடைந்துள்ளனர். 6 பேர் காணாமல் போயுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை இரவு பெய்த கனமழையால் வீதிகள் நீரில் மூழ்கின. சியோல் நகரம் மற்றும் அண்டை மாகாணங்கள் முழுவதும் மின்தடை ஏற்பட்டது.

சில பகுதிகளில் கடந்த 80 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மழை பெய்துள்ளதாக கொரியாவின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்னும் சில நாட்களுக்கு மழை நீடிக்கும் என வானிலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சியோலின் சில பகுதிகள், மேற்குத்துறைமுக நகரமான இஞ்சியோன் மற்றும் சியோலை சுற்றியுள்ள கியோங்கி மாகாணம் உள்ளிட்ட பகுதிகளில் திங்கட்கிழமை இரவு ஒரு மணி நேரத்திற்கு 10 சென்ரிமீற்றர் மழை பெய்ததாக யோன்ஹாப் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், சியோலின் டோங்ஜாக் மாவட்டத்தில் ஒரு மணி நேரத்திற்கு 141.5 மி.மீ. மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக கொரியாவின் வானிலை ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. இது 1942 இற்குப் பிறகு மிக உயர்ந்த மழை வீச்சியாகும்.நேற்று செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி, சியோலில் குறைந்தது ஐந்து பேரும், கியோங்கி மாகாணத்தில் மேலும் இருவரும் இறந்துள்ளனர்.

அவர்களில் நான்கு பேர் வெள்ளத்தில் மூழ் கிய கட்டிடங்களில் சிக்கி இறந்தனர். ஒருவர் மின்சாரம் தாக்கி இறந்தார். ஒருவர் பஸ் நிறுத் தத்தின் இடிபாடுகளுக்கு அடியில் காணப்பட் டார். மற்றொருவர் நிலச்சரிவில் இறந்தார் என கொரிய வானிலை ஆய்வு நிறுவனம் நிறுவனம் கூறியது. (அ)

# சிறிது நேரம் முடங்கியது கூகுள்!

நியூயோர்க், ஒக. 10

கூகுள் இணைத்தளம் நேற்று முன் தினம் இரவு ஒரு அரிய செயலிழப்பை சந்தித்தாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் உள்ளிட்ட பல நாடுகளில் கூகுள் தேடுதலின் போது ‘எரர்’ (error) என முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எவ்வாறாயினும், பிற வலைத்தளங்களான ஜிமெய்ல் மற்றும் யூரியூப் போன்ற பிற கூகுள் பயன்பாடுகள் பாதிக்கப்படவில்லை.

இரவு 9:09 மணியளவில் ஆரம்பமான இந்த செயலிழப்பு, இரவு 9:40 மணியளவில் முற்றாக இணையத்தளம் செயலிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், இரவு 10:30 மணியளவில் பெரும்பாலும் சிக்கல் தீர்க்கப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# ‘கோவாக்சின்’ தடுப்பூசிக்கு ஜப்பான் அரசு அங்கீகாரம்

ரோக்கியோ, ஒக. 10

நாட்டுக்கு வருகை தரும் பயணிகளுக்கு ‘கோவாக்சின்’ தடுப்பூசியை பூஸ்டர் டோஸாக செலுத்த ஜப்பான் அனுமதி அளித்துள்ளதாக பாரத் பயோ ரெக் நிறுவனம் தெரிவித்துள் து.

பயணிகளுக்கு ‘கோவாக்சின்’ தடுப்பூசியை பூஸ்டர் டோஸ் செலுத்த ஜப்பான் அனுமதி அளித்துள்ளதை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறோம், இது எங்கள் கொரோனா தடுப்பூசியின் செயல்திறனுக்கு கிடைத்த மற்றொரு அங்கீகாரம் என்று குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக, அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளின் பட்டியலில் கோவாக்சின் தடுப்பூசியை ஜப்பான் சேர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



## ஜூலை மாத சிறந்த வீரராக பிரபாத் ஐ. சி. சியால் தெரிவு!

டுபாய், ஓக. 10

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஜூலை மாதத்துக்கான சிறந்த வீரருக்கான விருதை இலங்கை அணியின் பிரபாத் ஜெயசூரிய பெற்றுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் திறமைகளை வெளிப்படுத்தி வரும் வீரர்களை ஒவ்வொரு மாதமும் தெரிவு செய்து ஐ. சி. சி. கௌரவித்து வருகின்றது.

அந்தவகையில், அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகளுக்கு எதிராக டெஸ்ட் போட்டியில் சிறப்பாக விளையாடிய இலங்கை அணியின் பிரபாத் ஜெயசூரிய ஜூலை மாதத்துக்கான சிறந்த வீரருக்கான விருதைப் பெற்றுள்ளார்.

# தேசிய பளு தூக்கல் போட்டி; யாழ். வீரர் புதிய சாதனைகள்!

யாழ்ப்பாணம், ஓக. 10

தேசிய ரீதியான பளு தூக்கல் போட்டியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த வீரரான ச. புசாந்தன் புதிய சாதனைகளைப் படைத்துள்ளார்.

தேசிய ரீதியில் கடந்த 6ஆம் திகதி பண்டாரகமையில் இடம்பெற்ற போட்டியில் 25 மாவட்டங்களையும் சேர்ந்த 44இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து ஒரே ஒருவராக சற்குணராசா புசாந்தன் கலந்து கொண்டார். தென்மராட்சியை சேர்ந்த இவர்,

மூன்று பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில் மூன்றிலும் வென்று, மூன்று தங்கப் பதக்கங்களை பெற்றார்.

120 கிலோவுக்கு மேற்பட்டோருக்கான பிரிவில் கலந்து கொண்ட இவர், ஸ்குவாட் பிரிவில் 330 கிலோ எடையையும், பென்ஞ்பிரஸ் பிரிவில் 175 கிலோ எடையையும், டெட்லிப்ட் பிரிவில் 261 கிலோ எடையையும் தூக்கி வெற்றி பெற்றுள்ளார்.

இதில் ஸ்குவாட் மற்றும் டெட்லிப்ட் பிரிவில் புதிய சாதனைகளை நிலைநாட்டியுள்ளார்.

அத்துடன், இந்தப் போட்டியில் மொத்தமாக 766 கிலோ எடையைத் தூக்கி புதிய சாதனையையும் படைத்துள்ளார்.



# ஆசிய கிண்ண கிரிக்கெட்; இந்திய அணி அறிவிப்பு!

புதுடில்லி, ஓக. 10

ஆசியக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியை அறிவித்துள்ளது இந்திய கிரிக்கெட் சபை. விராட் கோலி மற்றும் கே. எல். ராகுல் அணியில் இடம் பெற்றுள்ளனர்.

இலங்கையில் நடைபெறுவதாக இருந்த ஆசிய கோப்பை 2022 தொடர் அங்கு நிலவும் அசாதாரண சூழல் காரணமாக ஐக்கிய அரபு எமிரேட்ஸூக்கு மாற்றப்பட்டது. வரும் 27ஆம் திகதி முதல் செப்ரெம் பர் 11ஆம் திகதி வரையில் இந்தத் தொடர் நடைபெறுகிறது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் என ஆறு அணிகள் நடப்பு ஆசிய கிண்ணத் தொடரில் பங்கேற்கின்றன. ஆறாவது அணி தகுதி சுற்றின் மூலம் தேர்ச்சி பெற்று இந்தத் தொடரில் விளையாடவுள்ளது. இந்த தொடர் இருபது -20 கிரிக்கெட் வடிவத்தில் நடைபெறவுள்ளது.


இந்தியா, பாகிஸ்தான் மற்றும் தகுதிச் சுற்றில் தகுதி பெறும் அணியும் குழு 'ஏ' சுற்று போட்டியில் விளையாடுகின்றன. இந்நிலையில், இந்த தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**அணி விவரம்:**

ரோஹித் சர்மா (அணித் தலைவர்), கே. எல். ராகுல் (உப அணித் தலைவர்), விராட் கோலி, சூர்யகுமார் யாதவ், தீபக் ஹூடா, ரிஷப் பந்த் (விக்கெட் காப்பாளர்), தினேஷ் கார்த்திக் (விக்கெட் காப்பாளர்), ஹார்திக் பாண்ட்யா, ரவீந்திர ஜடேஜா, அஸ்வின், சாஹல், ரவி பிஷ்னோய், புவனேஷ்வர் குமார், அர்ஷ்தீப் சிங் மற்றும் ஆவேஷ் கான்.

இதேவேளை, மேலதிக வீரர்களாக ஸ்ரேயாஷ் ஐயர், அக்சர் பட்டேல் மற்றும் தீபக் சஹார் அணியில் இடம் பெற்றுள்ளனர். (ஐ)





## பிரபல கிரிக்கெட் நடுவர் ரூடி விபத்தில் மரணம்!

கேப்டவுன், ஓக. 10

சர்வதேச கிரிக்கெட் நடுவரான 73 வயதான ரூடி கோர்ட்சன் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கேப்டவுனிலிருந்து தனது வீடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த போது ரிவர்ஸ்டேல் என்ற இடத்தில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.

இந்த விபத்தில் இவருடன் மேலும் மூவர் உயிரிழந்தனர் என்று அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விபத்து தொடர்பில் அவரின் மகன் ரூடி கோர்ட்சன் ஜூனியர் தென்னாபிரிக்காவின் வானொலி செய்தி சேவை ஒன்றுக்கு தனது தந்தை விபத்து ஒன்றில் உயிரிழந்தார் என்று தெரிவித்தார்.

தனது நண்பர்கள் சிலருடன் ஒரு கோல்ப் போட்டிக்குச் சென்ற அவர், திங்கட்கிழமை திரும்பி வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர்கள் மற்றொரு சுற்று கோல்ப் விளையாட முடிவு செய்ததாகத் தெரிகிறது" என அவரின் மகன் மேலும் தெரிவித்துள்ளார்.

ரூடி கோர்ட்சன் சர்வதேச கிரிக்கெட்டில் 331 போட்டிகளுக்கு நடுவராக செயல்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இருபது - 20 கிரிக்கெட்டில் பொலார்ட் புதிய சாதனை!



லோர்ட்ஸ், ஓக. 10

இருபது -20 கிரிக்கெட்டில் 600 போட்டிகளை விளை யாடிய முதல் வீரர் என்ற சாதனையை மேற்கிந்தியத் தீவுகளின் வீரர் பொலார்ட் நிகழ்த்தியுள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெறும் 100 பந்துகள் போட்டி யில் லண்டன் - மன்செஸ்டர் அணிகளுக்கு இடையி லான போட்டியில் பங்கேற்ற 35 வயது பொலார்ட் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார் (100 பந்துகள் போட்டி, இருபது -20 போட்டியாகவே கருத்தப்படுகிறது). லோர்ட்ஸில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 11 பந்துகளில் 4 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 34 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார் பொலார்ட்.

600 இருபது - 20 போட்டிகளில் விளையாடிய பொலார்ட் ஒரு சதம், 56 அரைச் சதங்கள் உள்பட 11,723 ஓட்டங்கள் எடுத்துள்ளார். பந்துவீச்சில் 309 விக்கெட்களை எடுத்துள்ளார்.

இவருக்கு அடுத்து, டுவைன் பிராவோ 543 போட்டி கள், சொஹைப் மாலிக் 472 போட்டிகள், கிறிஸ் கெய்ல் 463 போட்டிகளில் விளையாடியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# பாராளுமன்றத்தை முற்றுகையிடாமல் பாதுகாப்பு வழங்கியுள்ளது இராணுவம்

## ஜனாதிபதி ரணில் பாராட்டு



கொழும்பு, ஓக. 10

**பொதுமக்கள் பாராளுமன்றத்தை முற்றுகையிடாத வகையில் பாதுகாப்பினை வழங்கி, இராணுவம் தமது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

பெலவத்தை அகுரேகொடவில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை கண்காணிப்பு விடயம் மேற்கொண்டிருந்தபோதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மேலும் பாராளுமன்ற நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதுடன், மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் வேலைத்திட்டத்தை பாராளுமன்ற உறுப்பினர்களே முன்னெடுக்கவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் நெருக்கடி நிலைமையில் இருந்து நாட்டை மீள கட்டியெழுப்புவதுடன், அடுத்த வருட இறுதிக்குள் நாட்டில் ஸ்திரதன்மை ஏற்படுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ)

# 1600 கோடி ரூபா வரியை இழந்தது இலங்கை அரசு

கொழும்பு, ஓக. 10

சீனி இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த வரியை 50 ரூபாவில் இருந்து 25 சதமாக குறைத்ததன் மூலம் இலங்கை அரசாங்கம் ஏறக்குறைய 1600 கோடி ரூபா வரியை இழந்தது தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு மேலதிக நீதவான் என்.சி. இளங்கசிங்க முன்னிலையில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது, இந்த தகவல் தெரியவந்தது.

2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 13 ஆம் திகதி நள்ளிரவு முதல் ஒரு கிலோ சீனிக்கான 50 ரூபா விசேட பண்ட வரி 25 சதமாக குறைக்கப்பட்டதன் காரணமாக இலங்கை அரசாங்கத்துக்கு கிடைக்கவேண்டிய 1600 கோடி ரூபா வரி வருமானம் இழக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. (அ)

# குருநாகல் வைத்தியசாலை ஆவணங்கள் பல திருட்டு!

கொழும்பு, ஓக. 10

குருநாகல் போதனா வைத்தியசாலையின் பதிவு அறையில் வைக்கப்பட்டிருந்த பெருமளவிலான ஆவணங்கள் இனந்தெரியாத நபர்களினால் திருடப்பட்டுள்ளன.

“திருடப்பட்ட ஆவணங்களில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் பதிவு தொடர்பான ஆவணங்கள் மற்றும் பிற முக்கிய ஆவணங்கள் உள்ளன” என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த சம்பவம் தொடர்பில் பதிவு அறையின் பொறுப்பதிகாரி ஒருவர் பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்ததையடுத்து வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சந்தன கெந்தகமுவ இது தொடர்பில் குருநாகல் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இதன்படி, சம்பவம் தொடர் பில் குருநாகல் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித் துள்ளனர்.

இந்த ஆவணங்கள் ஒரே தடவையில் திருடப்பட வில்லை என்றும், பல வாரங் களாக தொடர்ந்து வந்துள்ளதாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)

# பெரும்போகத்துக்குத் தேவையான எரிபொருளை வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஓக. 10

பெரும் போகத்திற்கு தேவையான எரிபொருள் அளவை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்தவகையில், பொலனறுவை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் கனரக இயந்திரங்களைப் பயன்படுத்தி அறுவடை செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு தேவையான அளவு டீசல் வழங்கப்பட்டு வருவதாகவும், முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கும் டீசல் விநியோகம் செய்யப்படும் என்றும் அமைச்சு மேலும் கூறியுள்ளது. (அ)

# ஜீவந்த பீரிஸ் கைதை தடுக்க கோரும் மனுவுக்கு சட்டமா அதிபர் ஆட்சேபம்

கொழும்பு, ஓக. 10

அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் கைது செய்யப்படுவதை தடுக்கும் வகையில் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்படுவதை தாம் எதிர்ப்பதாக சட்டமா அதிபர் நேற்று உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் ஆஜராகியிருந்த அரச சட்டத்தரணி நவிந்த டி விக்ரமசிங்க, ஜீவந்த பீரிஸினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

இந்த மனு எல்.டி.பி. தெஹிதெனிய, யசந்த கோதகொட மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் ஏற்கனவே நீதிமன்ற உத்தரவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டும் எனவும் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத் தரணி நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

மனுதாரர் தற்போது தலைமறைவாக இருப்பதாகவும், அவர் கைது செய்யப்படுவதை தடுக்கும் நீதிமன்ற உத்தரவை தாம் கடுமையாக எதிர்ப்பதாகவும் அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

மனுதாரர் சார்பில் நீதிமன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி றியன்சி அரசகு லரத்ன, தனது கட்சிக்காரர் எந்தவொரு சட்டவிரோத செயலையும் செய்யவில்லை எனவும், அடிப்படை உரிமை மனுவில் கோரப்பட்டுள்ள நிவாரணம் வழங்கப்படவேண்டும் எனவும் தெரிவித்தார். இந்த மனுவை செப்ரெம்பர் முதலாம் திகதி மீளவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். (அ)

# வேலைவாய்ப்புக்காக வெளிநாட்டுக்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 10

2022 ஆம் ஆண்டில் வெளிநாடுகளுக்கான தொழிலாளர் இடப்பெயர்வு 3 இலட்சத்து 33 ஆயிரத்தை தொடும் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

2022 ஓகஸ்ட் முதலாம் திகதி வரை 174,584 இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளனர். இதற்கு முன்னர் 2014 ஆம் ஆண்டிலேயே 3 இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர் இடம் பெயர்வு பதிவாகியிருந்தது.

மேலும் கட்டார், சவுதி அரேபியா, குவைத், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமன் ஆகிய இடங்களுக்கே அதிகமானோர் சென்றுள்ளனர்.

இதற்கிடையில் ஜூன் மாதத்தில் 274 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைந்த பின்னர் ஜூலை மாதத்தில் வெளிநாட்டு தொழிலாளர்களிடம் இருந்து பணவரவு உயர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஆயுதம் தேட அழைத்துச் சென்ற பாதாள குழு உறுப்பினர் கற்குழிக்குள் வீழ்ந்து உயிரிழப்பு!

கொழும்பு, ஓக. 10

பல்வேறு கொலை சம்பவங்களுடன் தொடர்புடைய துவான் சிரார், கடுவெல-கொரத்தொட்ட பகுதியில் ஆயுதம் தேடுவதற்காக அழைத்துச் செல்லப்பட்டபோது கற்குழி ஒன்றில் வீழ்ந்து மரணமடைந்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொலிஸ் விசேட அதிரடிப்படை யினர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

கடவத்தை-இஹல பியன்வில பகுதியைச் சேர்ந்த துவான் சிரார் என்ற 34 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சந்தேக நபர் அங்கொட லொக்கா என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் தலைவரின் நெருங்கிய உறவினர் என்பதும் தெரியவந்துள்ளது. (அ)

# குடிதண்ணீர் கட்டணமும் உயரும்!

கொழும்பு, ஓக. 10

நாட்டில் குடிதண்ணீர் கட்டணத்தை உயர்த்துவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இதுதொடர்பான பிரேரணையை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல நேற்று முன்தினம் அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளதுடன் அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அதன்படி, குடிதண்ணீர் கட்டணத்தில் திருத்தம் செய்வது குறித்து எதிர்காலத்தில் அறிவிக்கப்படவுள்ளது.

எவ்வாறாயினும், கடந்த 10 வருடங்களாக நீர் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.(அ)

## பிசுபிசுத்துப்...

நேற்றைய தினம் பல்வேறு இடங்களிலும் போராட்டங்களை நடத்துவதற்கு பல தரப்புகளும் அழைப்பு விடுத்திருந்தன. ஆனாலும், இந்தப் போராட்ட களங்களுக்கு எதிர்பார்த்தளவு மக்களை அவைகளால் வரவழைக்க முடியவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும், அவசரகால சட்டத்தை நீக்க வேண்டும் என்ற விடயங்களை வலியுறுத்தியே இந்தப் போராட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டன.

இடதுசாரி, முன்னிலை சோசலிஷக் கட்சி என்பன கோட்டை ரயில் நிலையம் முன்பாக போராட்டத்தை முன்னெடுத்தது. இதில், 200 வரையிலானவர்களே கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் பாராளுமன்றுக்கு வெளியில் நடந்த போராட்டத்தில் இளைஞர்களை கைது செய்வது நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. “நாம் நிபந்தனை இல்லாமல் சர்வகட்சி அரசாங்கத்தை ஆதரிக்கிறோம். எங்களை நிபந்தனை விதிப்பதற்கு தள்ளாதீர்கள் என்று இதன்போது சஜித் பிரேமதாஸ கூறினார்.

ஜே. வி. பி. தலைமையிலான தொழில் சங்கங்கள் விகாரமாதேவி பூங்கா அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவர்கள் சுதந்திர சதுக்கத்தை நோக்கி பேரணியாக சென்றனர்.

இதேசமயம், பிரதான போராட்டகளமான காலிமுகத்திடலில் சிறு குழுவினரே போராட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு சுமார் 15 கூடாரங்களே இருந்தன. அங்கு 50இற்கும் குறைவானவர்களே நின்றிருந்தனர். “இன்றுடன் (நேற்றுடன்) போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருகிறோம். ஆனால், ஊழல் அரசியல்வாதிகள் வந்தால் மீண்டும் நாம் ஒன்றிணைவோம்”, என்று போராட்ட செயல்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இதையடுத்து இந்தப் போராட்டகளம் கலைந்தது.

## எத்தகைய...

தரப் பரீட்சை பெறுபேறுகள் இந்த மாதம் வெளியிடப்படும். 2022 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி நவம்பர் மாதம் நடைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று பாராளுமன்றில் எதிர்க்கட்சி தலைவர் முன்வைத்த கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்ட விடயங்களை தெரிவித்தார்.

மேலும், கோவிட் பெருந்தொற்று தாக்கத்தால் கடந்த இரண்டரை வருட காலமாக கல்வித்துறை பாதிக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். 2020ஆம் ஆண்டு முதல் தேசிய பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன. அத்துடன், பாடத்திட்டங்களையும் முழுமைப்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளன.

இந்த வருடம் தேசிய பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் நலன் கருதி விசேட கற்பித்தல் நடவடிக்கைகள் பாடசாலை மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நாட்களில் உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்காக பயிற்சி வழங்கப்பட்ட ஆசிரியர்களின் ஊடாக கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

கோவிட் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைக் கல்வி நடவடிகைகள் தற்போது கட்டம் கட்டமாக சீர் செய்யப்படுகிறது. எரிபொருள் பற்றாக்குறைக்கு தற்போது தீர்வு எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த மாதத்துக்குள் பாடசாலை கல்வி நடவடிக்கைளை வழமைக்கு கொண்டு வர முடியும்.

வடக்கு மாணவர்கள், ஆசிரியர்களின் பாடசாலை வருகை ஏனைய மாகாணங்களை காட்டிலும் அதிகளவில் காணப்படுகிறது. வடக்கில் உள்ளவர்கள் யுத்த காலத்திலும் கல்விக்கு முன்னுரிமை வழங்கினார்கள். தற்போதும் அந்த நிலைமை காணப்படுகின்றமை மகிழ்வுக்குரியது - என்றார். (ஐ)

நேற்றைய போராட்டங்களில் மக்கள் அதிகளவில் பங்கேற்காமைக்கு போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டமையும், வரிசையின்றி எரிவாயு, எரிபொருள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டமையுமே பிரதான காரணங்கள் எனத் தெரிவிக்கப்பட்டன.

கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி முதல் காலிமுகத்திடலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டங்களின் விளைவால், மே 9இல் மகிந்த ராஜபக்ஷ, ஜூன் 9 பஸில் ராஜபக்ஷ பதவி விலகினர். ஜூலை 9 ஆம் திகதி ஆயிரக்கணக்கானோர் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டனு. இறுதியில், கோட்டாபய ராஜபக்ஷவும் பதவி விலகினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிறுவர்...

தொடர்புடைய பெயர்கள் சூட்டப்படுகின்றன. இது உலகில் எங்கும் நடக்காத சிறுவர் உரிமை மீறல் - என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், முல்லைத்தீவு மாவட்டங்களில் இராணுவத்தின் ஆளுகைக்குள் முன்பள்ளிகள் இயங்குவது சிறார் உரிமைகளை மீறுவதுடன், ஐ. நா. சாசனத்தில் உறுதிப்படுத்தப்பட்ட சிறுவர் உரிமைகளையும் மீறுகிறது.

முன்பள்ளி பெயர்ப்பலகைகளில் சிவில் பாதுகாப்பு திணைக்கள இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. அதில் இரண்டு துப்பாக்கிகள் உள்ளன. சிறுவர்களுக்கான புத்தகப்பையில் சிவில் பாதுகாப்புப் படை என பொறிக்கப்பட்டுள்ளது - என்று தெரிவித்த அவர், தனது குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமாக புகைப்படங்களையும் சமர்ப்பித்தார்.

மேலும், ‘இந்த விடயங்கள் பற்றி வடக்கு ஆளுநருக்கு எழுத்துமூலம் அறிவித்தேன். அவர் நிர்வாகம் தெரியாதவர். சாரத்தை கட்டிக் கொண்டு சண்டித்தனத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். காட்டுவாசியை போல செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அவருக்கு தமிழ் தெரியாது. பெயர்தான் தமிழ். இவ்வாறானவர்களைத்தான் நீங்கள் ஆளுநர்களாக நியமிக்கிறீர்கள்’ என்றும் கூறினார். (ஐ)

## ஓக. 09...

டனர். இந்தப் போராட்டங்களின் விளைவால், மே 09ஆம் திகதி அன்றைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதவி விலகினார்.

இதைத் தொடர்ந்து ஜூன் 09ஆம் திகதி நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகினார். இதையடுத்து ஜூலை 09ஆம் திகதி காலிமுகத்திடலில் ஆரம்பமான போராட்டத்தில் ஜனாதிபதி மாளிகை முற்றுகையிடப்பட்டது. இதைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேறிய அன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளிநாடு ஒன்றுக்கு தப்பியதுடன் பின்னர் பதவியையும் இராஜிநாமா செய்திருந்தார்.

இந்நிலையில், 123 நாட்கள் நீடித்த இந்தப் போராட்டம் நேற்று ஓகஸ்ட் 09ஆம் திகதியுடன் முடிவுக்கு வருவதாக போராட்டக்காரர்கள் அறிவித்தனர்.

இதனிடையே, போராட்டத்தால் மே 09 மகிந்த விலகல், ஜூன் 09 பஸில் விலகல், ஜூலை 09 கோட்டாபய விலகல் ஆனால், ஓகஸ்ட் 09 போராட்டமே விலகியது என்றும் சமூகவலைத்தளங்களில் ஒரு தரப்பினர் கருத்துக்களை பதிவிட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழில் 6 பேருக்கு...

அனைவரும் கடந்த ஒரு வாரத்தில் இனங்காணப்பட்டனர். மருத்துவமனைக்கு வரும் நோயாளர்கள் சிலரிடம் நடத்தப்பட்ட பரிசோதனையிலேயே இவர்கள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேநேரம், தொற்றுக்கு உள்ளான அனைவரும் கொரோனா தடுப்பூசியை ஒரு வருடத்துக்கு முன்பாகவே பெற்றுக் கொண்டவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# வடக்கு விவசாய உத்தியோகத்தர்கள் இன்று சுகவீன விடுமுறை போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 10

வடக்கு மாகாண விவசாய உத்தியோகத்தர்கள் இன்று புதன்கிழமை சுகவீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

வடக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் வடக்கு மாகாண ஆளுநர் ஊடகங்களுக்கு செய்தி வழங்கியமைக்கு கண்டனம் தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களத்தினர் விடுத்துள்ள அறிக்கையில்,

வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் எந்த தவறும் இழைக்கவில்லை. இந்நிலையில், அவரின் பதவி மீளப் பெறப்பட்டதானது அரச உத்தியோகத்தர்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தி அவமதிப்பதாகவே அரச உத்தியோகத்தர்களான நாம் மிகவும் மனவேதனை அடைகின்றோம். அத்துடன், அவருக்கு உரித்தான பதவியுயர்வையோ பதவிக்கான நியமனத்தையோ வழங்காது பதவி மீளப்பெறுவதானது அநீதியான செயல்பாடு என நாம் கருதுகின்றோம்.

அவருக்கு ஏற்பட்ட அபகீர்த்தியை துடைத்து அவரால் வழங்கப்பட்ட அர்ப்பணிப்பான மற்றும் புனிதமான சேவையை மதித்து அவருக்குரிய, நீதியை வழங்க வேண்டும். இதற்கு அடையாளமாகவே இன்றைய தினம் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடுகிறோம் என்று அவர்கள் தெரிவித்தனர். (ஐ- 3)

# மல்லாகத்தில் வாள்வெட்டு இளைஞர் ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஓக. 10

மல்லாகத்தில் சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றுக்குள் புகுந்து வன்முறையாளர்கள் நடத்திய வாள்வெட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மல்லாகம் பகுதியில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் படுகாயமடைந்தவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ-3)

## எரிபொருள்...

பெற்றுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்தக் குழு அண்மையில் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரை வாளை காட்டி மிரட்டியிருந்தது. இந்தச் சம்பவம் குறித்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பில் இருவர் கைதாகி, ஒருவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே, எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளருக்கு சொந்தமான இரு வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டது.

இந்த விடயம் குறித்து உடனடியாக பொலிஸாருக்கு தகவல் அளித்த போதிலும் நீண்டநேரமாக அப்பகுதிக்கு பொலிஸார் வருகை தரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பெருந்தோட்ட...

கல் செய்த எழுத்தாணை மனுவையும் தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கும் அரசாங்கத்தின் யோசனையை இரத்து செய்யுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மார்ச் 2021இல் முதலாளிகள் சம்மேளனம் தாக்கல் செய்திருந்த எழுத்தாணை மனுவே இவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்டது.

மேலும், தொழிலளார் ஒருவருக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை 22 கம்பனிகளுமம் கடைப்பிடிக்கவேண்டும் உத்தரவிடப்பட்டது. (ஐ)

## 75 வீதம்...

125 வீதமும், 91 - 120 வரையான அலகுகளுக்கு 89 வீதமும் 121 - 180 வரையான அலகுகளுக்கு 79 வீதமும் கட்டணங்கள் அதிகரிக்கின்றன.

இலங்கை மின்சார சபை 183 வீதம், 229 வீதமான கட்டண உயர்வுகளை கோரிய போதும் சராசரியாக 75 வீதமான கட்டண உயர்வுக்கே அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, 2013 ஆம் ஆண்டின் பின்னர் - 9 ஆண்டுகளின் பின்னர் மின் கட்டணம் அதிகரிக்கப்படுகிறது என்றும் தெரவிக்கப்பட்டது. (ஐ)

## அம்பாந்தோட்டை...

வந்தடையவுள்ளது என்றும் அறிய வருகின்றது.

சீனக் கப்பலின் வருகையை பிற்போடுமாறு வெளிவிவகார அமைச்சு சீனாவுக்கு எழுத்துமூலம் நேற்று அறிவித்தது. இருந்தபோதிலும், அந்தக் கப்பல் அம்பாந்தோட்டை நோக்கி வேகமாகப் பயணிப்பதாகக் கூறப்படுகின்றது.

நேற்று பிற்பகல் யுவான் வாங் - 5 கப்பல் இலங்கையிலிருந்து 680 கடல் மைல் தொலைவில் இருந்தது. முன்னதாக 10 -12 நொட்ஸ் வேகத்தில் பயணித்த இந்தக் கப்பல், நேற்று பிற்பகல் தொடக்கம் 14 நொட்ஸ் வேகத்தில் பயணிப்பதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்தன.

யுவான் வாங் - 5 கப்பல் செய்மதி மற்றும் ஏவுகணை கண்காணிப்பில் ஈடுபடுகின்றது. இந்தக் கப்பல் அம்பாந்தோட்டைக்கு வருவதற்கு கடந்த ஜூன் 28ஆம் திகதி சீனா அனுமதி கேட்டது. ஜூலை 12ஆம் திகதி கப்பலின் வருகைக்கு இலங்கை அரசு அனுமதியளித்தது.

ஆனால், சீனக் கப்பலின் வருகை இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் அது இலங்கைக்கு வரக் கூடாது எனவும் இந்தியா அழுத்தங்களை பிரயோகித்தது. கடும் எதிர்ப்புகள் காரணமாக கப்பலின் வருகையை தாமதிக்கும்படி இலங்கை சீனாவை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, சீனாவில் தயாரான பாகிஸ்தானுக்கு சொந்தமான பி. என். எஸ். தைமூர் (PNS Taimur) என்ற போர் கப்பலும் நாளை மறுதினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் என்று அறிய வருகின்றது.

சீனாவின் அதிதொழில்நுட்ப கப்பல் அம்பாந்தோட்டைக்கும், சீனாவில் தயாரிக்கப்பட்ட பாகிஸ்தானுக்கு சொந்தமான போர் கப்பல் கொழும்புக்கும் ஒரே சமயத்தில் வருகை தருவது இலங்கைக்கு பெரும் நெருக்கடியை கொடுக்கும் அதே வேளை, இந்தியாவின் கடும் சீற்றத்துக்கும் இலக்காக நேரும் எனவும் கருதப்படுகின்றது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

## திருமுறை விண்ணப்பம்!

யாழ்ப்பாணம், ஓக. 10

“சிவநெறிய திருமுறை விண்ணப்பம்” தொடர் 75 நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இது பவள விழா வார சிறப்பு மலர்வரங்காக நடைபெறவுள்ளது.

இலங்கை நேரம் இரவு 6. 30மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வில் யாவரும்இணைந்து கொள்ள முடியும்.

இந்த நிகழ்வில் சூம் செயலி மூலம் 417 892 9023 என்ற அடையாள எண்ணில், 202811 என்ற கடவுச்சொல்லைப் பயன்படுத்தி இணை முடியும். அல்லது, Dr sivasri vytheeswara kurukkal என்ற யூ-ரியூப் சனல் மூலமும் பார்வையிட முடியும். (ஐ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 - 10 - 1941



மறைவு 07 - 08 - 2022

### திருமதி சின்னத்தம்பி சின்னத்தங்கச்சி

யாழ். புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சின்னத்தங்கச்சி அவர்கள் 07.08.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற குட்டியர், தெய்வானைப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதி தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும்,ஸ்ரீரதி அவர்களின் அன்புத் தாயாரும், வரதராஜன் அவர்களின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து, சின்னப்பிள்ளை, பொன்னையா, செல்லத்துரை, தம்பிப்பிள்ளை மற்றும் செல்வரத்தினம்(இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,பார்த்தீபன், கஜந்தா, காலஞ்சென்ற அனுஷா, பிரவீன், ஜனனி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

பார்வைக்கு
Thursday, 11 Aug 2022 11:30 AM - 3:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Thursday, 11 Aug 2022 3:30 PM - 4:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave> Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Thursday, 11 Aug 2022 4:30 PM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வரதராஜன் - மருமகன்.**

தொடர்புகளுக்கு:
**வரதராஜன் - மருமகன்**
Mobile : +14164646169
**ஸ்ரீரதி - மகள்**
Mobile : +14164394654
**தாசன் - உறவினர்**
Mobile : +16478999837
**தயாளன் - உறவினர்**
Mobile : +14164642972

# ஜனாதிபதி தெரிவின்போது சில எம்.பிக்களுக்கு மிரட்டல்

## சபையில் கூறினார் சமிந்த விஜேயஸ்ரீ



**கொழும்பு, ஓக. 10**

**நாடாளுமன்றில் இடம்பெற்ற ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பின் போது, சில உறுப்பினர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான சமிந்த விஜேயஸ்ரீ தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றில் இடம்பெற்ற ஜனாதிபதித் தெரிவுக்கான வாக்கெடுப்பின்போது, சில உறுப்பினர்கள் அச்சுறுத்தப்பட்டனர்.

இந்த அச்சுறுத்தலினால்தான் அவர்கள், ஜனாதிபதி தெரிவின் போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

வாக்களிக்காவிட்டால் விளைவுகளை எதிர்க்கொள்ள நேரிடும் என அச்சுறுத்தப்பட்டுள்ளார்கள். இது தொடர்பாக சபாநாயகர் விசாரணை நடத்த வேண்டும்.

இந்த ஜனாதிபதித் தெரிவானது சட்டபூர்வமானது அல்ல. பாராளுமன்றில் இதன் வாக்கெடுப்பு இடம்பெற்றாலும் பாராளுமன்றுக்கு வெளியே உறுப்பினர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளார்கள்.

எனவே, இதுதொடர்பாக விசாரணை நடத்தி, நாட்டு மக்களுக்கு உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும்- என்றார். (அ)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம் நாளை மறுதினம் 2000 நாளை எட்டுகிறது

## ஆதரவு வழங்குமாறு கோரிக்கை

வவுனியா, ஓக.10

காணாமல் போனவர்களின் உண்மை நிலையினை வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட போராட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 2000 நாட்களை எட்டுகின்ற நிலையில் அன்றைய தினம் இடம்பெறவுள்ள போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு வழங்குமாறு வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் சி.ஜெனிற்றா தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போர் முடிந்து 13 வருடங்களாகியும் எமக்கான தீர்வு கிடைக்காத நிலையில் தொடர்ச்சியாக நாம் போராடி வருகின்றோம். அரசிடம் நம்பிக்கை இழந்த நாம் இன்று சர்வதேசத்தை நோக்கி எமது நீதிக்கான குரலை எழுப்பியுள்ளோம்.

காணாமற்போனோர் அலுவலகத்தின் மூலம் எமக்கான நீதி கிடைக்கும் என்று நம்பிக்கை இழந்துள்ள நாம் அதனை நிராகரித்துள்ளோம்.எனினும் எம்மை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதனை விரைவுபடுத்துமாறு பாராளுமன்றில் தெரிவிக்கின்றனர். உங்களது பதவிகளை பாதுகாப்பதற்காக மக்கள் விரும்பாத விடயங்களை நீங்கள் அங்கு கதைக்கிறீர்கள். இது தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகம்.

இதேநேரம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை எமது தொடர்ச்சியான போராட்டம் 2000 நாட்களை எட்டுகின்றது. இதனையடுத்து கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் அடையாள கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது. எனவே குறித்த போராட்டத்தில் அரசியல்கட்சிகள், பல்கலைகழக மாணவர்கள், பொதுஅமைப்புக்கள், தமிழ் தேசியம் பேசுவோர், பொதுமக்கள், வர்த்தகர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு சர்வதேச நீதிக்கான கோரிக்கையை வலுப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்-என்றார். (அ)

# தேர்தலுக்கு செல்ல உத்தரவாதமளித்தால் சர்வகட்சி அரசுக்கு ஆதரவு வழங்குவோம்

## ஐக்கிய மக்கள் சக்தி சபையில் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 10

குறுகிய காலத்திற்குள் பொதுத் தேர்தலொன்றுக்கு செல்ல தயாராக இருந்தால், சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தயாராக உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மூன்று வருடங்கள் வீணாகிவிட்டன. எமது அனைவரது நேரமும் விரயமாகிவிட்டது. இதனால்தான் மக்கள் இந்த பாராளுமன்றத்தை உடனடியாக கலைக்குமாறு வலிறுத்தி வருகிறார்கள்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.



ஆனால், மகாநாயக்க தேரர்கள், புத்திஜீவிகள், பேராசிரியர்கள் என அனைவரும் விரைவில் ஒரு தேர்தலுக்கு செல்லவேண்டும் என்று கூறியுள்ளனர்.

எனவே, எமது ஆதரவு சர்வகட்சி அரசாங்கத்துக்கு வேண்டுமாக இருந்தால், மிக விரைவில் பொதுத் தேர்தலொன்றுக்கு செல்ல வேண்டும்.

இதற்கான உத்தரவாதத்தை ஜனாதிபதி எமக்கு வழங்கினால் நாம் ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவே உள்ளோம்.

அதனைவிடுத்து, இதேபோன்று இந்த நாட்டை 2025 ஆம் ஆண்டு வரை கொண்டுசெல்ல முடியாது. இந்த அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டது.

இதனை நம்பி, சர்வதேச நாடுகள் ஒருபோதும் கடன் கொடுக்காது. நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்ல வேண்டுமாயின் பாராளுமன்ற தேர்தலொன்று அவசியமாகும்.

குறைந்தது 6 மாதம் அல்லது ஒரு வருடத்திலேனும் தேர்தலுக்குச் செல்ல வேண்டும். இதனைத்தான் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவிடமும் மகாநாயக்க தேரர்கள், புத்திஜீவிகள் என அனைவரும் வலியுறுத்தினார்கள். இதனை நினைவில் வைத்து செயற்பட்டால் சிறப்பாக இருக் கும்- என்றார்.(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.05 மணி : உளநலம்-காசி ஜீவலிங்கம் (யாழ்பாவாணன்)



7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ரஜினி முருகன், விக்ரமாதேவி திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை



**இரவு**
07.00 மணி : பாரதீ



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் நிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு